RNI No.APTAM/2021/80590

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:6, Issue:03, Pages:56
October-2026, Price Rs.20/-

அக்டோபர் 2026
விலை ரூ.20/-



13-10-2026
செவ்வாய்க்கிழமை
இரவு : ஹம்ஸ வாகனம்



திருமலையில் வருடாந்திர
பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு
15-09-2026 அன்று ஆந்திர மாநில
அரசு சார்பில்
திருவேங்கடமுடையானுக்குப் பட்டு
வஸ்திரங்களைச் சமர்ப்பித்த
மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர்
திரு. நாரா சந்திரபாபு நாயுடு
அவர்களுக்கு ஸ்வாமி
பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே.
பொறுப்பாண்மைக்குழுத்தலைவருடன்
தி.தி.தே. உயரதிகாரிகள்

வ்யவஸாயாத்மிகா பு$_3$த்$_3$தி$_4$ர் ஏகேஹ குருநந்த$_3$ந ।
ப$_3$ஹுசாக$_2$ா ஹ்யநந்தாச்ச பு$_3$த்$_3$த$_4$யோऽவ்யவஸாயிநாம் ॥

அர்ஜுனா! இந்தக் கர்மயோகத்தில் தீர்மானமான புத்தி ஒன்றுதான் இருக்கிறது. ஆனால், ஒரு விஷயத்திலும் நிச்சய புத்தி இல்லாத, விவேகமற்ற, பயனில் ஆசையுள்ள மனிதர்களுடைய புத்திகள் நிச்சயமாகப் பல நோக்கங்களுடையனவாகவும், முடிவற்றவையாகவும் இருக்கின்றன.



*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–41*



பிடெனோ நின்னங்க்ரி ஸ்ரீநிவாசா ।
என்ன துடிஸி கொள்ளெலோ ஸ்ரீநிவாசா ॥
நின்ன நுடியே ஜிதல்லோ ஸ்ரீநிவாசா ।
நன்ன நடெதப்பு காயோ ஸ்ரீநிவாசா ॥

*ஸ்ரீநிவாசா! உம்முடைய திருவடிகளை நான் ஒரு போதும் விடமாட்டேன். என்னை உமது சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். உமது வார்த்தைகளையே கட்டளையாக ஏற்பேன். நான் செய்யும் தவறுகளை சரிசெய்து, நல்வழியில் நடக்க வழிதுணையாக இருந்து என்னைக் காத்தருள்வீராக!*

*- ஸ்ரீ பிரசன்ன வேங்கடதாசர்*

## திருச்சானூர்
## ஸ்ரீபத்மாவதித் தாயார் நவராத்திரி உத்ஸவம்

**12-10-2026 முதல் 20-10-2026 வரை**



ஆஸ்வயுஜ மாதத்தில் 12-10-2026 திங்கள் அன்று துவங்கி 20-10-2026 அன்று முடியும் விதமாக திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் திருவேங்கடவனின் பட்டத்து மஹாராணியான ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு நவராத்திரி உத்ஸவம் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அனைவரும் வந்து தாயாரை தரிசித்து, இன்னருளைப் பெறவும்.



## ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம், சத்ரவாடா

சித்தூர் மாவட்டம் நகரி அருகில் சத்ரவாடாவில் எழுந்தருளி உள்ள ஸ்ரீபூ நீளாதேவி சமேத ஸ்ரீகரிவரத ராஜ ஸ்வாமிக்கு, 25-10-2026, ஆஸ்வயுஜ மாதம், ஞாயிற்றுக்கிழமை அன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி, 26-10-2026 திங்கட்கிழமை அன்று திருப்பவித்ரோத்ஸவம், பூர்ணாஹுதி நடைபெறும்.

## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம், ரிஷிகேஷ்



உத்தராகாண்ட் மாநிலம், ரிஷிகேஷில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு, 24-10-2026, சனிக்கிழமை அன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி 27-10-2026 வரை பவித்ரோத்ஸவம் நடைபெறும்.



| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் |
|---|---|---|
| 24-10-2026 | சனி | --- |
| 25-10-2026 | ஞாயிறு | பவித்திரப் பிரதிஷ்டை |
| 26-10-2026 | திங்கள் | பவித்ர சமர்ப்பணம் |
| 27-10-2026 | செவ்வாய் | பூர்ணாஹுதி |



## ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம், வாயல்பாடு (வால்மீகிபுரம்)

வால்மீகிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமிக்கு, 23-10-2026, வெள்ளிக்கிழமை அன்று அங்குரார்ப்பணத்துடன் துவங்கி 26-10-2026 வரை பவித்ரோத்ஸவம் நடைபெறும்.

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் |
|---|---|---|
| 23-10-2026 | வெள்ளி | --- |
| 24-10-2026 | சனி | பவித்ர பிரதிஷ்டை |
| 25-10-2026 | ஞாயிறு | பவித்ர சமர்ப்பணம் |
| 26-10-2026 | திங்கள் | பவித்ரோத்ஸவம் நிறைவு |



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

அக்டோபர் 2026

மலர் 06 இதழ் 03




## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீஹம்ஸ சந்தேஸ காவியத்தில் திருமலையின் சிறப்பு<br>-திரு எஸ். ராமாநுஜன், பெங்களூரு. | 7 |
| ஆரோக்கியமும் நலமும் நல்கும் ஏழுமலையான்<br>- திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 9 |
| வேதம் காட்டும் பரம்பொருள் - பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 13 |
| மாமுனி மனத்துள்ளான்<br>- முனைவர் ஸ்ரீ. உ.வே.அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி. | 17 |
| முன்னோர்களை நினைவுகூறும் மகாளய அமாவாசை<br>- பிரஹ்மஸ்ரீ முனைவர் முத்துகிருஷ்ணன் ஆசாரி, சென்னை. | 20 |
| திருமலை புகழ்பாடும் இராமாயணம் -திரு.பிரபு சங்கர். | 24 |
| திக்கெங்கும் தரிசிப்போம் திருவேங்கடவனை<br>- திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 31 |
| முதலாழ்வார்கள் அனுபவித்த திருமலையின் இயற்கையெழில்<br>- முனைவர் ந.மைதிலி, சென்னை. | 35 |
| திருவேங்கடவன் திருவருள் : "ஸப்தகிரி" இதழில் என் அனுபவங்கள்<br>-திருமதி இராஜகுமாரி வெங்கடேசன், ஆரணி. | 38 |
| திருவேங்கடமுடையானும் எம்பெருமானாரும்<br>- கீர்த்திமூர்த்தி ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணமாசாரியர், திருப்பதி. | 40 |
| நவராத்திரி நாயகிகள் -திரு.கே.ராமநாதன், சேலம். | 44 |
| நீதிக்கதை : கெட்டவர் நால்வர் யார் தெரியுமா?<br>- திரு.பொ.பாலாஜிகணேஷ், சிதம்பரம். | 46 |
| ராசிபலன்கள் : அக்டோபர் 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : முதல் தரிசனம், முதல் பூஜை, முதல் நைவேத்தியம் | 52 |



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. முத்தாட ரவிச்சந்திரா,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

*வெளியீட்டாளர்-ஆசிரியர்,*
*பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.

*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363


நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


### வாசகர்களுக்கு...

இந்த இதழில் பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு சில சிறப்புக்கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளதால் தொடர்கட்டுரைகள் வெளியிடப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *அன்ன வாகனத்தில் அலைமகளாக திருமலையப்ப ஸ்வாமி.*

பின்னட்டை : *சக்கரஸ்நானம், திருமலை.*



உங்களுடன்

# அனைத்திலும் வெற்றி பெற்றிடுவோம்!

*பலபலவே ஆபரணம் பேரும் பலபலவே, பலபலவே சோதி வடிவு பண்பு எண்ணில்,*
*பலபல கண்டு உண்டு கேட்டு உற்று மோந்து இன்பம், பலபலவே ஞானமும் பாம்பு*
*அணை மேலாற்கேயோ*

“எம்பெருமான் பலப்பல ஆபரணங்களைச் சூடிக் கொண்டு வலம் வருகின்றார்” என்று நம்மாழ்வாரும், *“அண்டரும் வானத் தவரும் ஆயிர நாமங்களோடு திண் டிறல் பாட வருவான்”* –“எம்பெருமான் வீதிவலம் வரும்பொழுது எல்லோரும் ஆடல் பாடல்களோடு இசைப்பார்கள்’’ என்று திருமங்கையாழ்வாரும் அருளிச் செய்கிறார்கள். ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு ஏற்ப திருமலையில் நடைபெறும் பிரம்மோற்சவத்தின் போது மண்ணோரும் விண்ணோரும் ஆடிப் பாடி மகிழ்ந்திட “திருவேங்கடமுடையான் மிக அழகான ஆபரணங்களை அணிந்து கொண்டு, தனித்தும், உபய தேவியருடனும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனம் என திருமாட வீதிகளில் எழுந்தருளி பக்தர்களுக்குத் திருக்காட்சி அளித்திடுவார்.

அதுபோன்றே அந்த அகில உலகிற்கும் ஜெகன் மாதாவும், பரந்தாமனான திருவேங்கடமுடையானின் பட்டத்து ராணியுமான திருச்சானூரிலே எழுந்தருள் புரியும் அலர்மேல் மங்கையான ஸ்ரீ பத்மாவதித் தாயாருக்கு நடைபெறும் நவராத்திரி உற்சவமும் காண்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திடும். விஜயதசமி அன்று ஸ்ரீ பத்மாவதித் தாயார் யானை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் மழையைப் பொழிந்திடுவார். மேலும், நாடெங்கிலும் இந்த நவராத்திரி உற்சவமானது ஒவ்வொரு ஊரும், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு வாசலும் என ஒரு பெரும் பண்டிகையாக மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகின்றன.

“நவ” என்றால் “ஒன்பது” அல்லது “புதுமை” என இரு பொருள் பட ஆன்றோர் கூறுவர்.

*ச்ரவணம் கீர்த்தனம் ஸ்மரணம் பாத சேவனம், அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யமாத்ம நிவேதனம்*

இந்நவராத்திரி நந்நாளினை “இறைவனின் திருலீலைகளையும், திருநாமங்களையும் கேட்டல்; பகவத் கீர்த்தனைகள், நாம சங்கீர்த்தனைகள் செய்தல்; எப்பொழுதும் இறைவனைத் துதித்தல்; இறைவனின் திருப்பாதங்களை வணங்குதல்; பக்தியோடு பூஜித்தல்; அர்ச்சித்தல்; இறைவனை வணங்கி நன்றி செலுத்துதல்; இறைவனின் அடியவன் என்ற உணர்வுடன் சேவை செய்தல்; இறைவனை நண்பனைப் போல் நேசித்தல்; அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து விட்டு அவனிடம் சரண் அடைதல்” போன்ற ஒன்பது வித பக்தி வழியைக் கடைபிடித்து நம் வாழ்க்கையை ஆன்மீகப் பாதையில் இன்பம் உடையதாக உருவாக்கிட வேண்டும்.

இன்னும் புதுமையாகக் கூற வேண்டுமெனில் தீயச்சொற்களைக் கேட்காமல் இருத்தல்; தீயவர்களைப் புகழாமல் இருத்தல்; நற்சொற்களை மட்டுமே பேசுதல்; பெரியோர், பெற்றோர், குரு மற்றும் தெய்வங்களின் திருப்பாதங்களைச் சேவித்தல்; நல்ல குணம் கொண்டோருடன் பழகுதல்; பெரியோர்களையும், குருவையும் தலை வணங்கி மரியாதை செலுத்துதல்; பெற்றோர்களுக்கு ஒரு அடிமையைப் போன்று சேவை செய்தல்; நல்ல நண்பர்களோடு மட்டுமே பேசி மகிழ்ந்து வாழ்தல்; மற்றவர்கள் நமக்குக் கொடுப்பதையும், நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதையும் “பகவத் அர்ப்பணம்” எனக் கூறி இறைவனுக்குச் சமர்ப்பித்தல் போன்ற ஒன்பது விதமான புதிய பழக்கங்களை நம் வாழ்வில் கடைபிடித்தல் வேண்டும். இவற்றைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் நம் வாழ்விலும் புதிய மாற்றங்கள் ஏற்படும். மேலும், நாமும் அனைத்து விதத்திலும் நன்மையையே அனுபவிப்போம் என்பது இதில் உள்ள புதுமை ஆகும்.

நவராத்திரி பண்டிகையில் துர்கா தேவி நமக்கு அருளும் நல்லாசிகள் இவையே ஆகும். அந்த அன்னையும் கூட நன்மையின் வாயிலாகத் தீமையை வென்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. நவராத்திரியின் முக்கிய செய்தி என்னவெனில் நாமும் மேற்கூறிய ஒன்பது வகையான பக்தி நற்பண்புகளைக் கொண்டு அவற்றினைப் பின்பற்றினால் அனைத்து இடங்களிலும் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெறலாம் என்பதே ஆகும். எனவே நாம் அனைவரும் அச்செய்தியை ஏற்றுக்கொண்டு அனைத்திடங்களிலும் வெற்றியின் கீதத்தைப் பாடத் தயாராகுவோம். அதுபோலவே அந்த தேவியின் அருளால் அனைத்து மங்களகரமான செல்வங்களையும் பெற்றிடுவோம். இதுதான் நவராத்திரி பண்டிகையின் முக்கிய நோக்கமாகும்.

நல்லனவற்றையே செய்வோம்! நன்மைகளையே பெறுவோம்!!

# ஸ்ரீஹம்ஸ சந்தேஸ காவியத்தில்



# திருமலையின் சிறப்பு

(சுவாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்தது)


**திரு. எஸ். ராமானுஜன், பெங்களூரு, 98866 42690.**


ஸ்ரீராமபிரான் சீதாப் பிராட்டியிடம் அன்னப் பறவையைத் தூதாக அனுப்புகிறார். அதனிடம் திருமலையின் தோற்றத்துடன், அதன் பெருமையையும் மிகவும் அழகாகக் கவிதை நயம் மிளிர "ஸ்ரீ ஹம்ஸ சந்தேஸம்" என்னும் காவியத்தில் வேதாந்த தேசிகர் திருவேங்கடமுடையான் எழுந்தருளி இருக்கும் திருமலையின் சிறப்பையும், அழகான வடிவத்தையும் இரண்டு சுலோகங்களில் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

**ஸ்ரீ ஹம்ஸ சந்தேஸத்தில்...**

21, 22 ஆகிய இரண்டு சுலோகங்களில் சொல்லி, "திருமலையில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் புரிந்திடும் திருவேங்கடமுடையானைச் சேவித்து அவருடைய கருணையைப் பெற்றுச் செல்" என்று கூறுகிறார். அந்த அழகான வர்ணனை பின்வருமாறு:

*விஷ்ணோர்வாஸாதவனிவஹநாத் பத்த ரத்னை ஸ்ஸிரோபி:*
*சேஷ: ஸாக்ஷாதயமிதி ஜனைஸ்ஸம்ய குண்ணீயமான:*
*அப்ரைர்யுக்தோऽ லஹுபிரசிரோன்முக்த நிர்மோக கல்பை:*
*அக்ரேபாவீ ததனுநயனே ரஞ்சயந்நஞ்ஜநாத்ரி:*

சுலோகம் 21ல், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் இருப்பிடமான (திருவேங்கட மலை) பூமியைச் சுமந்து கொண்டு ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டது போன்ற உச்சியுடன் (தலைகளுடன்) கூடிய மேற்கில் தலை, கிழக்கில் வாலைப் போன்று அமைந்திருக்கும் இத்திருமலை "ஸ்ரீ ஆதி சேஷனாகவே" பக்தர்கள் கருதுகின்றார்கள்.

இதை அனைவருமே எவ்வித குழப்பமும் இல்லாமல் ஏற்றுக் கொள்கின்றனர்.

இங்கு காணப்படும் மேகங்கள் பாம்பின் உரித்தத் தோலைப் போன்று தோற்றமளிக்கும். இவ்வாறு பக்தர்களின் கண்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் மலையான, "அஞ்சனை மலை" உன் கண்களுக்குத் தென்படும். "அஞ்சனை இந்த மலையில் தவம் செய்து ஆஞ்சனேயனை மகனாகப் பெற்றார் என்று சொல்லப்படுகிறது" என்கிறார்.

*தத்ரரூடைர்மஹதிமனுஜை ஸ்வர்கிபிச் சாவதீர்ணை:*
*ஸத்த்வோந்மேஷாத்வயகதமித: தாரதம்யாதி பேதை:*
*ஸாதாரண்யாத்ஃபலபரிணதேஸ்ஸங்தேஸாபத்ய மானம்*
*சக்த்யாகாமம் மதுவிஜயின:த்வம்சகுர்யாஸ்ஸ பர்யாம்*



ஸ்ரீராமபிரான் சீதாப்பிராட்டியிடம் அன்னப்பறவையைத் தூதாக அனுப்புகிறார். அதனிடம் திருமலையின் தோற்றத்துடன், அதன் பெருமையையும் மிகவும் அழகாகக் கவிதை நயம் மிளிர "ஸ்ரீஹம்ஸ சந்தேஸம்" என்னும் காவியத்தில் ஸ்ரீஸ்வாமி வேதாந்த தேசிகன் அழகாக வர்ணித்திருக்கிறார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



**திருமலையில் இரத்த தானம் செய்யுங்கள்!**
**திருவேங்கடவனின் அருள் பெறுங்கள்!!**

- இரத்த தானம் என்பது ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உயிரைக் காக்கும் மிகச் சிறந்த அறப்பணியாகும்.
- அவசர காலத்தில் துடிக்கும் ஒரு உயிருக்கு அமுதமாக இந்த இரத்தம் விளங்குகிறது
- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைப்படுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- ஒரு உயிரைக் காத்திடும் இரத்த தானம் கூட அந்த திருவேங்கடமுடையானுக்குச் செய்திடும் சேவையாகும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரைக் காத்திடுங்கள்!!**

மேலும், சுலோகம் 22–ல் “இந்தத் திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு சத்வ குணம் ஓங்கி நிற்கிறது. ஆகையால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற ஏற்றத்தாழ்வு அவர்களுக்குள் காணப்படுவதில்லை. மலையடிவாரத்திலிருந்து ஏறும் பக்தர்களுக்கும், வானத்திலிருந்து திருமலைக்கு எம்பெருமானைச் சேவிக்க வரும் தேவர்களுக்கும் அவர்கள் வேண்டுதலுக்கு ஏற்ப பலன் கிடைக்கிறது. மது என்ற அரக்கனை அழித்த திருமலைநாதரை திரள் திரளாக வந்து பூஜிக்கிறார்கள். இதே போல நீயும் அவரை பூஜித்து அவருடைய அருளைப் பெறுவாயாக” என்று ஸ்ரீ ராமபிரான் சொல்வதுபோல் ஸ்ரீ ஸ்வாமி வேதாந்த தேசிகன் அழகாக அருளிச் செய்து இருக்கிறார். சத்வ குணம் மிகுந்து வளரும் திருமலையில் மண்ணோரும் விண்ணோரும் பூஜித்து மகிழும் திருமலையையும், திருவேங்கடமுடையானையும் போற்றி வணங்கி இன்னருள் பெறுங்கள்.




# ஏழுமலையப்பன்

ஏழுமலை வாழ் ஏக தெய்வமாம்
நம்மை வாழவைக்கும் வரதராஜனாம்
பாமா ருக்மணி பதியாம் வாழ்க்கைப்
பாதையைக் கூறும் ‘கீதை’ நாயகனாம்

குசேல ருக் குகந்த நண்பன் ஏழைக்
குசேலர் மனதைக் குளிர வைத்தவன்
‘ஆண்டாள்’தமக்கு அருமை தலைவனானவன்
பாண்டவருக்கு ஆபத்பாந்தவனானவன்

ஆதி கேசவன் அனந்த நாராயணன்
மாதவன் மதுசூதனன் கிருஷ்ணன்
தசஅவ தாரன் தசரதப் புத்திரன்
அசுரர்க் கெதிரி அமரர்க்கு அதிபதி

கானப் பிரியன் கார்முகில் வண்ணன்
கமலா நாயகன் கோபாலகிருஷ்ணன்
தேவர் தமக்கு ‘தெய்வம்’ ஆனவன்
தேரது ஓட்டிய ‘பார்த்த சாரதி’

பாரதி போற்றும் ‘பண்டரி நாதன்’
குழலது ஓதும் ‘கோகுல பாலகன்’
பழவினை நீக்கும் ‘பக்த ரட்சகன்’
குருவாயூரன் குவளைக் கண்ணன்

வேதநாயகன் விஜய ராகவன்
பாதம் பணிந்து பெறுவோம் நலமே!

**கவிஞர் முனைவர் வீ.புகழேந்தி, சென்னை**



சென்ற இதழின் தொடர்ச்சி...

# ஆரோக்கியமும் நலமும் நல்கும் ஏழுமலையான்

– திரு. அத்தி ரங்கராஜன்,
திருப்பதி, 98490 99246

ஸ்விம்ஸ் பல்கலைக்கழகத்தில் 2007ஆம் ஆண்டில் இருந்து ஒரு சிறப்பான மைக்ரோஸ்கோபி நிலையம் நடந்து வருகிறது. 31 டிசம்பர் 2025 வரை, 264 முகாம்களை நடத்தி 6,845 பேருக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் முகாம்களை நடத்தி வலிப்பு நோய், நீரிழிவு நோய் மற்றும் ரத்த அழுத்தத்திற்கும் ஸ்விம்ஸ் மருத்துவமனை சிகிச்சை அளிக்கிறது.

**பிங்க் பஸ்**

புற்றுநோய் இன்று ஏழைகளையும் விடுவதில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வருமுன் காப்போம் என்ற அடிப்படையில், ராயலசீமா பகுதியில் உள்ள மகளிர்க்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து ஸ்விம்ஸ் மருத்துவமனை நவீன பரிசோதனை வசதியுடன் கூடிய "பிங்க் பஸ்" என்னும் ஒரு பேருந்தை நடத்துகிறது.

கிராமப்புறங்களுக்குச் செல்லும் இந்தப் பேருந்து புற்றுநோய் உட்பட பல நோய்களுக்கான அறிகுறிகளைக் கண்டறிந்து, மருத்துவம் தேவைப்படுவோரை முன்னெச்சரிக்கையாக தமது மருத்துவமனைக்கு வரவழைத்து சிகிச்சை அளிக்கிறது. நோய் முற்றி, தீரா நிலையை அடையும் முன்னே அந்த மகளீரைக் காக்க முடிகிறது. இதனால் அந்த குடும்பமும் காப்பாற்றப்படுகிறது. 2025ஆம் ஆண்டில் மட்டுமே 264 சிகிச்சை முகாம்களை நடத்தி, 12,102 பெண்களுக்கு புற்றுநோய்க்கானப் பரிசோதனைகளை நடத்தினர்.

அதேபோல், காசநோயும் ஒரு உயிர்க் கொல்லி நோய் என்கிற நிலை உள்ளதால்,

**பர்ட் மருத்துவமனை**

1985ஆம் ஆண்டு முடவியல், எலும்பு, முதுகுத் தண்டு நோயாளிகளுக்காக நிறுவப்பட்ட ஒரு சிறப்பு அறக்கட்டளைதான் "பாலாஜி ஊனமுற்றோர் முடவியல் அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மையம்". இது ஏழை எளிய மக்களின் உடல் குறைபாடுகளைப் போக்கும் ஒரு அறிய பொக்கிஷம் ஆகும். 1985ஆம் ஆண்டு 50 படுக்கைகளுடன் துவங்கப்பட்ட இம்மருத்துவமனை இன்று 300 படுக்கை வசதி கொண்டு வளர்ந்திருக்கிறது. இங்கு இந்தியா முழுவதிலிருந்தும் ஊனமுற்ற நோயாளிகள் பெருவெள்ளமாகத் திரண்டு வந்து, சிகிச்சை பெற்றுள்ளனர்.

கை, கால், முதுகுத் தண்டு, எலும்பு, செரிப்ரல் பால்சி பிரச்சினை உள்ளவர்களே அன்றி, தீக்காயம், விபத்தினால் ஊனமானவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. முதல் வருடம் 140 அறுவை சிகிச்சைகளுடன் ஆரம்பித்த இந்த மருத்துவமனை, 2025ஆம் ஆண்டு 7,447 அறுவை சிகிச்சைகள் நடத்தியது.

மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஜி. ஜெகதீஷ் தலைமையில் இங்கு முடவியல் (ஆர்த்தோபீடிக்ஸ்), அனெஸ்தீஷியா, நவீன அறுவை சிகிச்சை மையங்கள், ரேடியோலஜி, கிளினிக்கல் லேபரேட்டரி, ரத்த வங்கி ,

பிசியோதெரபி மற்றும் அதி நவீன செயற்கை கை/கால் பொருத்தும் மையமும் உள்ளன.

தினசரி இங்கு 25–30 தீவிர அறுவை சிகிச்சைகளும், 5–10 சாதாரண அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இங்குள்ள செயற்கை கால் பொருத்தும் மையம் இந்தியாவிலேயே மிகவும் புகழ் பெற்றது. நடக்கமுடியாதவனை நடத்துபவன் அந்த நாராயணனே எனும் நம்பிக்கையுடன் இங்கு வரும் சாமானிய மக்கள் நலமடைந்து இல்லம் திரும்புகின்றனர்.

## குழந்தைகளுக்கான இருதயாலயம்

பிறப்பிலேயே இருதய நோய் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருக்கும் நிலையில், இவர்களுக்கு சிகிச்சை அளிப்போரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள நிலையில், தேவஸ்தானத்தினர் நிறுவிய “ஸ்ரீ பத்மாவதி இருதயாலயம்” சிறுவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

தங்களின் நோய் பற்றி தெரியாமல் வலியை மட்டுமே அனுபவிக்கும் குழந்தைகள், அவர்களைப் பார்த்து மனவேதனை அடையும் பெற்றோர்கள் என்று எல்லோருக்குமே அபயம் அளித்து, இருதய நோய்


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸ்ரீவேங்கடேஸ்வரா பிராணதான அறக்கட்டளை

இதயம், சிறுநீரகம், கண், குடலியல், மூளை மற்றும் புற்றுநோய் போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டு, அதற்கான அதிக செலவுமிக்க சிகிச்சையை மேற்கொள்ள இயலாத ஏழை நோயாளிகளுக்கு இலவச மருத்துவ வசதிகளை வழங்குவதே “ஸ்ரீ வேங்கடேஸ்வரா பிராணதானம் அறக்கட்டளை”யின் நோக்கமாகும். நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு, ஹீமோபிலியா, தலசீமியா மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான சிகிச்சை முறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கவும் இத்திட்டம் முன்மொழிகிறது. இரத்த வங்கி, செயற்கை உறுப்புகள், இயன்முறை மருத்துவம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

சாதி, இனம், மதம் ஆகியவற்றைக் கடந்து அனைத்து ஏழை நோயாளிகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். ஸ்விம்ஸ், பர்ட், ருயா மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்கப்படும். ஸ்ரீ வேங்கடேஸ்வரா மருத்துவ அறிவியல் நிறுவனம் ஏழை மற்றும் நலிந்த மக்களுக்கு இந்த அறக்கட்டளை வழங்கிய உடனடி மற்றும் நீண்ட காலப் பலன்களைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தை என்றும் தொடர நன்கொடையாளர்களிடம் இருந்து நிதி திரட்டப்பட்டு, தி.தி. தேவஸ்தானத்தால் ஒரு அடிப்படை நிதியம் உருவாக்கப்பட்டது. பக்தர்களும் இந்த அறக்கட்டளைக்கு தாராளமாக நன்கொடை அளித்து ஏழை எளியோரின் வாழ்வில் ஒளியேற்றி திருவேங்கடமுடையானின் இன்னருளைப் பெற்றிடுங்கள்



மானிட சேவையே மாதவ சேவை




- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர் நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர் முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877–2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877–2264025, 2264619.

| | | |
|---|---|---|
| இணையதளம் | : | www.tirumala.org |
| மின்னஞ்சல் | : | officebirrd@gmail.com |
| மொபைல் செயலி | : | BIRRD HOSPITAL |

தீர்க்கும் ஒரு தாயுள்ளம் படைத்த அந்த பத்மாவதித் தாயாரின் பெயரிலேயே அக்டோபர் 2021–ல் இந்த மருத்துவமனை நிறுவப்பட்டது. பிறந்த குழந்தைகள் முதல், நோயுடனே வாழ்ந்துகொண்டிருக்கும் சிறுவர்கள் வரை இங்கு எல்லோருக்குமே அனுமதி உண்டு.

இதன் இயக்குனர் டாக்டர் என். ஸ்ரீநாத் ரெட்டி தலைமையில், 30 ஜுன் 2026 வரை 5,090 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இதில், 26 இருதய மாற்று அறுவை சிகிச்சைகளும் அடக்கம். ஆந்திர மாநிலத்திலேயே குழந்தைகளின் இதயத்திற்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யும் ஒரே மருத்துவமனை இதுவே ஆகும்.

மிகவும் நுட்பமான குழந்தைகளின் இதயத்தில் உள்ள நோயைப்போக்கி அவர்களை மீண்டு வரச்செய்வது ஒரு மிகப்பெரிய சாகசம். அதை செம்மனே செய்கிறது இந்த மருத்துவமனை.அந்த கருணை உள்ளம் படைத்த வேங்கடவனின் ஆசிகளுடன் மக்களின் பிணிகளையும், துன்பத்தையும் தீர்க்க தி.தி.தே. எடுத்து நடத்துகின்ற மருத்துவ முயற்சிகளைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

## திருமலைக்கு வரும் பக்தர்களுக்கான மருத்துவ சேவைகள்

சாமானிய மக்களுக்காக இத்தனை மெனக்கெட்டு உயர்தர மருத்துவ வசதிகளை செய்து வைத்திருக்கும் தேவஸ்தானம், திருமலைக்கு வரும் பக்தர்களின் நலன் கருத மறந்ததே இல்லை. திருமலை மலையேறி நடந்து வரும் வழியிலும், மலையேறி வந்தபின்னோ அல்லது தரிசனத்திற்காக

வரிசையிலோ, வைகுண்டம் கியூ கட்டிடத் தொகுதி யிலோ நோய்வாய்ப்படும் பக்தர்களுக்காக மருத்துவமனைகளும், மருத்துவ முகாம்களும் நடத்துகிறது. அலிபிரி மற்றும் ஸ்ரீவாரி மெட்டு மலை வழிப் பாதையில் நடந்து வரும் பக்தர்களுக்காக இந்த முகாம்கள் இருக்கின்றன.

இந்த முகாம்களில் தேர்ச்சிபெற்ற மருத்துவர்களும், செவிலியர்க ளும், அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை, மருந்துகள் கொண்டு தயார் நிலையில் இருப்பர். மூச்சிரைப்பு, நெஞ்சு வலி, ரத்தக்கொதிப்பு, மூட்டு/இடுப்பு வலி போன்றவற்றுக்கு சிகிச்சை கோரி வரும் பக்தர்களை இங்கு பொறுமையாகக் கவனித்து, வேண்டிய உதவிகள் செய்து அனுப்புகிறார்கள்.

இதுபோன்ற திடீர் என்று நோய்வாய்ப்படும் பக்தர்களுக்கு, அவர்களின் குடும்பத்தினருக்கு ஒன்றென்றால், திக்குமுக்காடிப் போகும் நிலைமை வருவதுண்டு. உடனடி மருத்துவம் தேவைப்படும் அவர்களுக்கு முதலுதவி அளித்து, அந்த ஆபத்தான நொடிகளைக் கடக்கச் செய்வதில் இந்த மருத்துவ முகாம்களின் பங்களிப்பு மிகவும் அதிகம்.

### திருமலையில் அஸ்வினி மருத்துவமனை

அதேபோல், திருமலையில் அஸ்வினி மருத்துவமனை உள்ளது. பக்தர்களுக்கு சாதாரண மாக வரக்கூடிய காய்ச்சல், வயிற்று வலி, அமிலத் தன்மை, வயிற்றுப்போக்கு, உடல் அலுப்பு, மூட்டு வலி போன்றவற்றுக்கு உடனடி மருத்துவ உதவி இங்கு அளிக்கப்படும். நாள்தோறும் சுமார் மூவாயி ரத்திற்கும் மேற்பட்டோர் இங்கு சிகிச்சையைப் பெறுகின்றனர். ஆனால், பெரிய அளவில் ஏதாவது மருத்துவம் தேவைப்படின், அவர்கள் ஸ்விம்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அபயம் தருவது மட்டுமல்லாமல், நவீன தொழில்நுட்பம் நிறைந்த மருத்துவ உதவியும் அளித்து, அந்த சிகிச்சைக்கான செலவையும் ஏற்று, "யாமிருக்க பயமேன்" என்று அந்த ஏழுமலையானே உறுதுணையாக நிற்பது இன்னுமா நம் கண் களுக்குப் புலப்படவில்லை! "மானிட சேவையே மாதவன் சேவை" என்ற செய்யுளை நினைவுபடுத் தும் வகையில், அந்த காக்கும் கடவுளின் கருணை மிகுந்த கண்கள் காசு இல்லாமல் நோயுடன் வாழும் மக்கள் மீது விழுந்தது.

முற்றும்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

### திருமலையில் செய்யக்கூடியவை

- ✔ திருமலைக்கு வரும் முன்னர் உங்களுடைய இஷ்ட அல்லது குல தெய்வத்தை வழிபடுங்கள்.
- ✔ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குமுன் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி விட்டு அங்குள்ள வராக ஸ்வாமியைத் தரிசனம் செய்யுங்கள்.
- ✔ கோயிலுக்குள் அமைதியைக் காத்து 'கோவிந்தா' என்று மனனம் செய்யுங்கள்.
- ✔ கோயிலுக்குள் உள்ளபொழுது ஏழுமலையானைத் தியானியுங்கள்.
- ✔ திருமலையில் பாபவிநாசனம், ஆகாச கங்கை, அஞ்சனாத்ரியில் அனுமனையும் தரிசியுங்கள்.
- ✔ திருமலையில் இருக்கும்வரை பழைய சம்பிர தாயங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளியுங்கள். உடன் வரும் யாத்திரிகர்கள் இடையே சமய உணர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ✔ உங்கள் காணிக்கைகளை உண்டியில் மட்டுமே செலுத்துங்கள்.
- ✔ திருமலையைத் தூய்மையாக வைத்துக் கொள் ளுங்கள். எளிதில் கருகக்கூடிய பொருட்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

### திருமலையில் செய்யக்கூடாதவை

- ✘ நான்கு மாடவீதிகளிலும் காலணிகளை அணிந்து செல்லாதீர்கள்.
- ✘ உங்களுடன் அதிகமான நகைகளையோ, பணத்தையோ எடுத்து வரவேண்டாம்.
- ✘ ஸ்வாமியைத் தரிசிப்பதற்குத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் திருமலைக்கு வராதீர்கள்.
- ✘ தரிசனத்திற்காக அவசரப்படாதீர்கள். வாய்ப்பு வரும்வரை வரிசையில் நின்று செல்லுங்கள்.
- ✘ சம்பிரதாயங்கள் அனுமதிக்காத பட்சத்தில் கோயிலுக்குள் வராதீர்கள்.
- ✘ திருமலையில் எல்லா மலர்களும் இறைவ னுக்கே உரியன. ஆகையால் திருமலையில் மலர்களைச் சூடாதீர்கள்.
- ✘ தண்ணீரை, மின்சாரத்தை வீணாக்காதீர்கள்.
- ✘ புதியோரை தங்கும் அறையில் அனுமதிக்காதீர். அவரிடம் அறை சாவிகளை ஒப்படைக் காதீர்கள்.
- ✘ திருமலைக்கு பிளாஸ்டிக் பாட்டில் மற்றும் பிளாஸ்டிக் பைகளை எடுத்து வராதீர்கள்.

இம்முறை திருமலையில் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற வருடாந்திர பிரம்மோத்ஸவத்தோடு அக்டோபர் 12 முதல் 20ஆம் தேதி வரை நவராத்திரி பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இதோடு திருச்சானூரில் ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கும் நவராத்திரி உற்சவங்கள் நடைபெறுவது இன்னொரு விசேஷம்.

திருமலை அப்பனுடைய நவராத்திரி பிரம்மோத்ஸவத்தில் அக்டோபர் 16ஆம் தேதி இரவு நடைபெற உள்ள கருட சேவை பக்தர்களுக்கு மிகப்பெரிய ஆனந்த அனுபவமாக அமையப் போகிறது. கருட சேவை என்றாலே திருமலையில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் உற்சவம் என்று நினைத்துவிடக்கூடாது. ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் மலையப்ப ஸ்வாமி கருட வாகனத்தில் எழுந்தருளி திருமாடவீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இரதசப்தமி அன்றும் கருட வாகனத்தில் காட்சி தருகிறார்.

அவ்வளவு ஏன்? மலையப்ப ஸ்வாமிக்கு நித்ய பிரம்மோத்ஸவம் உண்டு. பிற்பகலில் திருக்கல்யாண உற்சவம் முடிந்த பிறகு பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். அந்த வாகனங்களில் கருட வாகனமும் ஒன்று.

ஆனால் மற்ற வாகனங்களுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு கருட வாகனத்திற்கு உண்டு.

கருடன் வேதத்தின் வடிவமாகக் கருதப்படுகிறார்.அதனால்தான் அவருக்கு “வேதமயன்” என்ற பெயரும் உண்டு. திருமாலுக்குத் தொண்டு செய்யும் நித்யசூரிகளில் முதன்மையானவராக கருடாழ்வார் விளங்குகிறார். கருட சேவையைத் தரிசிப்பது ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பலனைத் தரும் என்பது ஐதீகம். பிறவிப் பிணிகளையும், தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களையும் போக்கக்கூடிய தரிசனம் என்று கருட சேவை போற்றப்படுகிறது.

ஆனால் கருட சேவையின் பெருமை இதை விட இன்னும் ஆழமானது. ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்கு ஆபத்து என்று தெரிந்தால் எப்படி உடனே துடித்துப் போவாளோ, அது போலத்தான் எம்பெருமானும் ஸ்ரீதேவித் தாயாரும் தம்மைச் சரணடைந்த அடியார்களுக்கு ஏதேனும் துன்பம் வந்துவிட்டால் கணநேரமும் தாமதிக்காமல் தவிப்பார்கள். நான் விரைவாகச் சென்று என் பக்தனைக் காக்க வேண்டும். உடனே கிளம்பு! என்று பகவான் துடிக்கும் அத்தவிப்பின் வேகமான வடிவமாகவே கருடாழ்வார் செயல்படுகிறார்.



# வேதம் காட்டும் பரம்பொருள்

– பேராசிரியர்
எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி,
94434 39963

பக்தனுடைய கூக்குரல் கேட்ட கணத்தில் பகவானை அங்கே கொண்டு சேர்க்கும் அதிவேகப் பயணம்தான் கருட வாகனம். ஸ்ரீரங்கநாதரின் பெருமைகளைப் போற்றும் ரங்கராஜ ஸ்தவத்தில், பராசர பட்டர் கருடாழ்வாரின் இந்தத் தனித்துவமான வேகத்தை வியந்து போற்றுகிறார்.

*த்வராயை தஸ்மை கருடாய தஸ்மை*

என்று அடியவர்களைக் காப்பதில் கருடனுக்கு உள்ள வேகத்தையும், ஆர்வத்தையும் மங்களா சாசனம் செய்கிறார்.

“எம்பெருமானே! அடியாரைக் காக்க மனதின் வேகத்தில் பாய்ந்து செல்ல உனக்கு விருப்பம் இருந்தாலும், உன்னைச் சுமந்து செல்லும் கருடன் இருக்கும்போது, அவனது வேகம் உன் மனதின் வேகத்தையும் மிஞ்சிவிடுகிறது. ஆகவே, வேதங்கள் ளால் போற்றப்பட்ட அந்த மகா வேகத்தைக் கொண் டவனும், அடியார்க்காகத் துடிக்கும் அந்த அதி வேகத்தின் (த்வராயை) வடிவமாகவே விளங்குபவ னுமான கருடாழ்வாருக்கு என்னுடைய நமஸ்காரங்கள்!” என்கிறார் பட்டர்

கருட சேவை என்பது வெறும் ஒரு வாகன சேவை அல்ல.பக்தனுடைய அழைப்புக்கும், பகவா னுடைய அருளுக்கும் இடையில் இருக்கும் தூரத்தை இல்லாமல் செய்யும் சேவை.



கருடன் வேதத்தின் வடிவம்.ஆண்டாள், பகவா னுடைய கோயிலை “புள்ளரையன் கோயில்” என்று அழைக்கிறாள். கருடன் வேதம். அந்த வேதத்தின் சாரமான பொருள் பகவான். ஒரு திருக்கோயிலின் முன்பாக நான்கு மூலைகளிலும் கை கூப்பி அமர்ந்து இருக்கும் கருடாழ்வார் நமக்கு ஒரு செய்தியைச் சொல்கிறார். இதோ, நான் காட்டுகின்ற இந்தக் கோயிலுக்குள் வேதம் காட்டும் பரம் பொருள் அர்ச் சாவதாரமாக எழுந்தருளியிருக்கிறார். அவரைச் சென்று தரிசியுங்கள். அதனால்தான் கோயிலுக் குள் ராஜகோபுரத்தைத் தாண்டி, துவஜஸ்தம் பத்திற்கு அருகில் கருடாழ்வார் அமர்ந்திருக்கிறார்.

அவர் கை கூப்பி பகவானை நோக்கிப் பார்க் கிறார். அவர் நம்மிடம் சொல்வது ஒன்றுதான். “நான் கை கூப்பி நிற்கும் அந்தப் பெருமாள்தான் வேதம் காட்டும் பரம்பொருள்”. இதனால்தான் ஒவ்வொரு பெருமாள் சன்னதியிலும் கருடாழ்வாருக்கு இத்தனை முக்கியத்துவம்.

திருமலையப்பனுடைய நவராத்திரி பிரம்மோத் ஸவத்தில் ஐந்தாம் நாள் கருட சேவை நடைபெறு கிறது. அன்று காலையில் ஸ்வாமி மோகினி அவதாரத்தில் பல்லக்கில் எழுந்தருளுகிறார். கூடவே தனிப்பல்லக்கில் கண்ணனும் எழுந்தருளுகிறார். முதலில் கண்ணனுக்கு கற்பூர ஆரத்தி நடைபெறும். அதன் பின்னர் மலையப்ப ஸ்வாமிக்கு கற்பூர ஆரத்தி நடைபெறும். அன்றிரவு நடைபெறும் கருட வாகனத்திற்கு இன்னொரு தனிச்சிறப்பும் உண்டு.

மூலவருக்கு அணிவிக்கப்படும் ஒப்பற்ற ஆபரணங்களான லட்சுமி ஹாரம், மகரகண்டி போன்ற ஆபரணங்களை அன்றைய தினம் உற்சவ மூர்த்தியான மலையப்ப ஸ்வாமி அணிந்து கம்பீர மாகக் காட்சி தருவார்.அந்தக் காட்சியைப் பார்க்கவே ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருமலையில் திரள்கிறார்கள். இதில் ஆண்டாளுக்கும் ஒரு அழகான தொடர்பு உண்டு. *“வேங்கடவர்க்கு என்னை விதி”* என்று தன்னை முழுமையாக வேங்கடவனிடம் ஒப்படைத்தவள் ஆண்டாள்.நாச்சியார் திருமொழி யின் முதல் பாசுரத்திலேயே காமன் எனப்படும் மன்மதனிடம் தன்னை எப்படியாவது வேங்கடவ னிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமாறு வேண்டு

பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரஹம் பழுதின்றி நிலைக்க வேண்டி பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். சூரிய ஒளியிலிருந்தும், மழை, காற்று இவைகளிலிருந்தும் பாதுகாப்புக்கு தனி இடம் கட்டினார்கள். பின்னர் அது கர்ப்பக்கிரகமாக மாறியது.

பின்னர் அவ்வறை மீது விமானம் அமைத்தார்கள். தொலை தூரத்திலிருந்து விமானங்களைத் தரிசித்து அதன் கீழ் உள்ள இறைவனையே தரிசித்தது போல் திருப்தியடைந்து வந்தார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட, சிறப்பு பெற்ற வடிவமைக்கப்பட்ட விமானங்கள் பின்வருமாறு :

திருமலை திருப்பதி–ஆனந்த விமானம், ஸ்ரீரங்கம்–ரங்க விமானம், திருவல்லிக்கேணி–ஆனந்த விமானம், திருநின்றவூர்–சீனிவாச விமானம், நாச்சியார் கோயில்–சீனிவாச விமானம், திருவீழிமிழலை–விஸ்வித விமானம், தஞ்சை பெரிய கோயில்–தக்ஷிண மேரு விமானம், திருக்கோட்டியூர்–அஷ்டாங்க விமானம், மதுரை கூடலழகர்–அஷ்டாங்க விமானம், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயி–விமல ஆபகிருதி விமானம், திருவிலந்தபுரம்–சுத்த சத்த விமானம் போன்ற விமானங்கள். இன்னும் இவ்வரிசையில் பல விமானங்கள் உள்ளன.



# விமான தரிசனம்

– சித்தாந்த ரத்னம் ஆர். தெய்வவீரலெட்சுமி, தூத்துக்குடி.

கிறாள். ஆண்டாளுடைய ஈடுபாட்டின் பிரதிபலிப்பாக, அவள் சூடிய நாச்சியார் திருமாலையை ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து எடுத்துக்கொண்டு வந்து திருமலையப்ப ஸ்வாமிக்கு சமர்ப்பிப்பார்கள்.இந்த கருட சேவை நாளில் நம்மாழ்வார் அருளிய திருவிருத்தமும் சேவிக்கப்படும்.

உண்மையில் எல்லா ஆழ்வார்களுக்குமே எம்பெருமானுடைய கருட சேவையில் தனி ஈடுபாடு உண்டு. பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டை எடுத்துக் கொண்டால் இதை மிக அழகாகப் புரிந்து கொள்ளலாம். பெரியாழ்வார் பகவானை கருடாரூடனாகக் கண்டபோதுதான் திருப்பல்லாண்டு பாடத் தொடங்குகிறார்.

வியப்பான விஷயம் என்னவென்றால், அவர் தன்னுடைய பதிகத்தையும் கருட வாகனத்தில் காட்சி தரும் எம்பெருமானோடு தொடர்புடைய பாசுரத்திலேயே நிறைவு செய்கிறார்.

*''சென்னியோங்கு தண் திருவேங்கடம் உடையாய்..''* என்று தொடங்கும் அந்தப் பாசுரத்தில், கருட வாகனத்தில் எழுந்தருளும் திருமாலிடம் தன்னுடைய பிறவித் துயர் தீர வேண்டும் என்று வேண்டுகிறார். *''பறவையேறும் பரம்புருடா! நீ என்னைக் கை கொண்டபின், பிறவி என்னும் கடலும் வற்றி பெரும்பதம் ஆகின்றதால்...''*என்று, கருடாரூடனாக எழுந்தருளும் எம்பெருமானிடம் பிறவி நோய் தீர வேண்டும் என்ற வரத்தைக் கேட்கிறார்.

திருமங்கையாழ்வாருக்கும் கருட சேவையில் அளவற்ற ஈடுபாடு. பெரும்பாலான திவ்யதேசங்களில் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் போது, கருடாரூடனாகக் காட்சி தரும் பெருமானை அவர் மறக்கவே மாட்டார்.கஜேந்திர மோட்சத்தைப் பாடும்போதும் யானையின் துயரத்தைத் தீர்ப்பதற்காக பெருமான் கருடன்மீது ஏறி விரைந்து

சென்றதைப் பாடுகிறார். ***“ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று...”*** என்று கருடனுடைய வேகத்தையும், எம்பெருமானுடைய கருணையை யும் ஒரே வரியில் காட்டி விடுகிறார்.

தில்லை திருச்சித்ரகூடத்திற்கும் திருமலைக்கும் ஒரு அழகான தொடர்பு உண்டு. இரண்டு திவ்ய தேசத்து பெருமாளுக்கும் பொதுவான பெயர் கோவிந்தன். அதனால் திருமங்கையாழ்வார் திருச்சித்ரகூடத்தில் கருட சேவையை எவ்வளவு அற்புதமாக அனுபவித்துப் பாடுகிறார் என்பதைப் பாருங்கள்.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**



*திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் தரிகொண்ட வெங்கமாம்பா அன்னதான கூடத்தில், திருமலையில் க்யூ வரிசை, க்யூ வரிசையில் காத்திருக்கும் கூடம் என பல இடங்களிலும், திருப்பதி மற்றும் திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கி வருகிறது.*

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- கைக்குழந்தைகளுக்குத் தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பால் தேவைப்படுபவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவல கத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

***இறைவனின் சேவையில் பக்தர்கள்; பக்தர்களின் சேவையில் தி.தி.தே.***



கலியுகத்தில் நாம ஸ்மரணை செய்வதே முக்தி அடைவதற்கான வழியாகும். “குறைவொன்றும் இல்லாத கோவிந்தா..” என்ற கூற்றின்படி “கோவிந்தா” என்ற பெயரைக் கூறினால் கோடி புண்ணியம். திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் “கோவிந்தா” என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் “கோவிந்த நாம” பாராயணம் செய்தல் நன்று.



**கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**


***வையத்து எவரும் வணங்க***
***அணங்கெழு மாமலைபோலே***
***தெய்வப்புள்ளேறி வருவான்***
***சித்திரகூடத்துள்ளானே.***

கருடனுக்கு தெய்வப்புள் என்ற பெயர் உண்டு.வானத்தில் பறக்கும் மற்ற பறவைகளைப் பார்த்து நாம் வணங்குவதில்லை.ஆனால் கருட தரிசனம் என்றாலே பக்தர்களுடைய மனத்தில் ஒரு தனி பரவசம்.

“கருட தரிசனம் பாவ விமோசனம்” என்ற நம்பிக்கை இருப்பதால், கருட சேவையைத் தரிசிப்பதற்காகவே பல்வேறு ஊர்களிலிருந்து பக்தர்கள் திருமலைக்கு வந்து காத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருமலை அப்பனுடைய நவராத்திரி பிரம்மோற்சவ கருட சேவை இந்த ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி இரவு நடைபெற உள்ளது.

நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்தபடி,

***ஓடும் புள்ளேறி சூடும் தண் துழாய்***
***நீடு நின்றவை ஆடும் அம்மானே***

என்று கருடன்மீது ஆரோகணித்து வரும் அந்தப் பெருமானை வணங்குவோம்.

கருடன் வேதம்.வேதம் காட்டும் பரம்பொருள் திருமலை அப்பன்.அந்தப் பரம்பொருளை வேதத்தின் வடிவான கருடாழ்வார் மீது கண்டு தரிசிக்கும் அந்த ஒரு கணத்தால் பிறவி நோய் தீரட்டும். பாவங்கள் விலகட்டும். மனம் தெளியட்டும். திருமலை அப்பனுடைய திருவருள் அனைவருக்கும் நிறையட்டும்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

“அந்தாமத்தன்பு” (திருவாய்மொழி 2.5) எனும் பதிகத்தின்படி எம்பெருமான் அடியவனுடன் கலந்த பின்னரே எம்பெருமானின் பெருமைகளனைத்தும் நன்கு விளங்கி நிற்பது போல பேரானந்தம் அடைகிறான். அதைப்போல, முன்பே தன் சொத்தான அனைத்து உலகங்களையும் வ்யாபித்துத் தனக்கு வசிப்பிடமாகக் கொண்டு இருப்பினும், மாமுனியின் மனத்தில் நிலைகொண்ட பின்னரே உலகனைத்திலும் இனிது நிவசிப்பதாகவும், எங்கும் வ்யாபித்துள்ள பெருமையும், தானடையும் ஆனந்தமும் முழுமைப் பெற்று விளங்குவதாகவும் திருவேங்கடமுடையான் கருதுகிறான்.

“கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்” என்று ஆசார்யர்கள் ப்ரார்த்திப்பதால் உலகிலுள்ள அனைத்து ஜீவன்களின் வாழ்ச்சி மாமுனியின் வாழ்ச்சியினாலேயே என்பது திண்ணம். எனவே திருமலையப்பனும் மாமுனியின் மனத்தில் வசித்து அவரை வாழ்ச்சியடையச் செய்து, அதன் மூலமாக அனைத்து உலகங்களிலும் தான் சிறப்பாக வசித்து அனைத்து ஜீவன்களையும் வாழ்ச்சியடையச் செய்கிறான் போலும். ஆசார்யரான மாமுனியன்றோ எம்பெருமானின் ஸர்வவ்யாப்தி முதலான பெருமைகளனைத்தையும் ப்ரமாணங்களைக் காட்டி அருளி மிகத்தெளிவாக விளக்கினவர்.



# மாமுனி மனத்துள்ளான்

- முனைவர் ஸ்ரீ. உ. வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி

இராமாநுஜர் எம்பெருமானைப் பற்றும்போது *"அகில ஜகத்ஸ்வாமிந், அஸ்மத்ஸ்வாமிந்"* (சரணாகதி கத்யம்) என்று முந்துற எம்பெருமானின் உலகனைத்திற்கும் ஸ்வாமியான தன்மையைச் சொல்லி விளித்து, பின்னர் அன்பின் மிகுதியால் தன் பொருட்டு எம்பெருமானின் தனிப்பட்ட ஸ்வாமியான தன்மையை அருளிச் செய்தார். எம்பெருமான் திருமலையப்பன் மாமுனியைப் பற்றும்போது, அன்பின் மிகுதியால் முந்துற அவரைப் பற்றி, பின்னர் அனைத்து உலகங்களையும்




ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்தியவாசம் செய்யும் கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்கள் வாழ்வில் நடத்திய திருவிளையாடல்கள் அதாவது தங்களுக்கு ஸ்வாமியின் திருவருள் கிடைத்த விதத்தினை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*எங்கள் முகவரி :*
**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி" அலுவலகம்,**
**2வது தளம்,**
**தி.தி.தே. அச்சகக் கட்டிடம்,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**

பற்றினமை *"முனிமானஸவாஸி, ஸர்வலோகநிவாஸி"* என்று காட்டப்படுகிறது.

லோக எனும் சொல்லுக்கு சாஸ்த்ரம் எனும் பொருளும் உள்ளதாக *"லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:"* (கீதை) எனும் சுலோகத்தின் கீதா பாஷ்யத்திலிருந்து அறியலாம். அப்போது "ஸர்வ லோக நிவாஸி" என்பது எம்பெருமான் அனைத்து சாஸ்த்ரங்களிலும் நன்றாக வசிக்கிறான், அதாவது அவனே மேம்பட்ட தெய்வமாகப் பேசப்படுகிறான் என்று பொருள்படும்.

கண்ணன் எம்பெருமானும் *"வேதைச்ச ஸர்வை: அஹமேவ வேத்ய:"* (கீதை) என்று அருளிச் செய்தான். இவ்வர்த்தத்தை விசதவாக் சிகாமணி ஆன மாமுனி தமது நூல்கள், காலக்ஷேபங்கள் (சொற்பொழிவுகள்) முதலியனவற்றால் நன்கு நிலைநாட்டியவர்.

*"நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது இராமாநுசன் தன்னியல்வு கண்டே"* (இராமாநுச நூற்றந்தாதி) என்கிறபடி இராமாநுசரின் பெருமை மாமுனிக்கும் உண்டென்பதில் ஐயமில்லை.

ஆகவே திருமலையப்பன் மாமுனியின் மனத்தில் வசிக்க, அவர் எம்பெருமானின் பெருமைகளை ப்ரமாணங்களுடன் நிலைநாட்ட, அதனால் சாஸ்த்ரங்கள் களிப்படைய, அவனின் *"ஸர்வலோகநிவாஸி"* (அனைத்து சாஸ்த்ரங்களிலும் அவன் நன்றாக வசிக்கிறான்) எனும் பெருமை மிகவும் விளங்கியது.

*"முனிமானஸவாஸி, ஸர்வலோகநிவாஸி"* என்ற இந்த இரண்டு தனித்தன்மைகளும் முறையே திருவேங்கடமுடையானின் ஸௌலப்யம் (எளிமை) மற்றும் பரத்வம் (மேன்மை) ஆகிய கல்யாண குணங்களைக் குறிக்கிறது. திருமலையப்பனிடம் இத்தகைய குணங்கள் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம் சுலோகத்தின் இறுதியில் "ஸ்ரீநிவாஸாய" என்று காட்டப்படுகிறது.

எம்பெருமான் அலர்மேல்மங்கை உறை மார்பனாக, பிராட்டி பெருவிருப்பத்துடன் நித்யமாக வசிக்கும் திருமார்பு உடையவனாக விளங்குகிறான். இது எம்பெருமானுக்கு பிராட்டியிடமுள்ள நிலையான பெருங்காதலையும் வெளிப்படுத்துகிறது. அவளிடம் உள்ள அன்பினால் எம்பெருமான் தனது மேன்மை, எளிமை முதலான குணங்கள் அனைத்தையும் அவளையிட்டே நிரூபிக்கும் படியாக, வெளிப்படும்படியாகக் கொண்டு இருக்கிறான்.

வேதமே *"லக்ஷ்மீசச பத்ந்யௌ"* (புருஷ ஸூக்தம்) என்று "எவருக்கு ஸ்ரீதேவி முதலான பத்நிகள் உள்ளனரோ, அவரே பரமாத்மா" என்று அடையாளமிட்டுச் சொல்லி எம்பெருமானின் பரத்வத்தை நிலைநாட்டியது. *"லக்ஷ்ம்யாஸஹ ருஷீகேச: தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக:"* என்கிறபடி கருணையே வடிவம் எடுத்தவளான பிராட்டியின் புருஷகாரம் (சிபாரிசு) கொண்டே

எம்பெருமான் அடியவர்களுக்கு மிகவும் எளியவனாகி இன் அருளைப் பொழிகிறான்.

*''கோளரி மாதவன் கோவிந்தன்''* (நாச்சியார் திருமொழி 6.2) என்று எம்பெருமான் மாதவனாக (பிராட்டிக்கன்பனாக) இருப்பதனாலேயே கோளரியாகவும் (மிடுக்கு, பெருமை மிக்குள்ள சிங்கத்தைப் போன்றவனாகவும்), கோவிந்தனாகவும் (எளியவனாக பசுக்களை மேய்த்து மகிழ்பவனாகவும்) இருப்ப தாக ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்தார். *''லோகநாதோ மாதவோ பக்தவத்ஸல:''* (ஸ்ரீ ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம் 78) என்று எம்பெருமான் மாதவனாக உள்ளபடியாலேயே அனைத்து உலகங்களுக்கும் ஸ்வாமியாகவும், அடியவர்களிடத்தில் மிகுந்த அன்புடையவராக, எளியவராகத் திகழ்வதாக பீஷ்மர் குறிப்பிட்டுள்ளார். எம்பெருமானுக்கு பிராட்டியுடனுள்ள நெருங்கிய ஸம்பந்தமே காரணமாக எம்பெருமானின் பரத்வ ஸௌலப்யங்கள் வெளிப்படுகிறது என்று உணர்த்துவதற்காக, மேலே குறிப்பிட்ட இரண்டு ப்ரமாணங்களிலும் "மாதவ" எனும் திருநாமம், எம்பெருமானின் பரத்வ ஸௌலப்யங்களைக் குறிக்கும் திருநாமங்களுக்கு இடையே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ வேங்கடேச மங்கள ச்லோகத்தில் *''முனிமானஸவாஸி, ஸர்வலோகநிவாஸி''* என்று திருமலை அப்பனின் ஸௌலப்ய பரத்வங்கள் முதலில் கூறப்பட்டு பின்னர் அதன் காரணமான பிராட்டி ஸம்பந்தம் "ஸ்ரீநிவாஸ" என்று கூறப்பட்டு உள்ளது. ச்லோகத்தின் இறுதியில் மங்களம் எனும் சொல் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்யப் பெறுவதைக் குறிக்கிறது.

எம்பெருமானுக்கு பிராட்டியுடன் உள்ள நெருங்கிய ஸம்பந்தத்திற்கு மங்களாசாஸனம் செய்யப் பெற்றாலே, அது காரணமாக அவனின் அனைத்துப் பெருமைகளும் மங்களாசாஸனம் செய்யப்பெற்றதாகி எம்பெருமான் விளங்கி நிற்பான். எனவே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி *''ஸ்ரீமத் சுந்தரஜாமாத்ரு முனிமானஸ வாஸினே! ஸர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்!!''* என்று திருவேங்கடமுடையானுக்கு மங்களாசாஸனம் செய்தருளினார். நாமும் அவ்வெம்பெருமானுக்கு பல்லாண்டு பாடுவோம்.

முற்றும்...








திருமலை திருப்பதி தேவஸ்தானம், ஆழ்வார் திவ்ய பிரபந்தம் செயல் திட்டம் சார்பில் "புண்டரீகாக்ஷர், ஸ்ரீராமாநுஜர், கோவிந்தபட்டர் மற்றும் தாசரதி" – தேசிய கருத்தரங்கு 17–08–2026 முதல் 19–08–2026 வரை திருப்பதியிலுள்ள அன்னமாசார்ய கலா மந்திரத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்ன ஜீயர் ஸ்வாமிகள், ஆழ்வார் திவ்ய பிரபந்தம் செயல் திட்டம் நிறுவனர் ஸ்ரீஉ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமிகள், ஆழ்வார் திவ்ய பிரபந்தம் செயல் திட்டம் சிறப்பு அதிகாரி டாக்டர் எம்.டி. ஆழ்வார் அவர்கள் மற்றும் பண்டிதர்கள் பலர் பங்கு கொண்டனர்.



# முன்னோர்களை நினைவுகூறும் மகாளய அமாவாசை



**பிரஹ்மஸ்ரீ முனைவர் முத்து கிருஷ்ணன் ஆசாரி, சென்னை, 9786280577**

## முன்னுரை

இந்தியப் பாரம்பரிய ஜோதிடம் என்பது வெறும் தனிநபரின் எதிர்காலத்தை கணிக்கும் முறையாக மட்டும் கருதப்படவில்லை. காலம் (கால தத்துவம்), திதி, நட்சத்திரம், கிரகநிலை, கர்மம், தர்மம் மற்றும் பித்ரு மரபு ஆகியவற்றை ஒருங்கிணைத்து மனித வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் ஒரு பாரம்பரிய அறிவுமுறையாகவும் அது விளங்குகிறது. அந்த வகையில் அமாவாசை திதி, குறிப்பாக மகாளய அமாவாசை அல்லது சர்வபித்ரு அமாவாசை, முன்னோர்களை நினைவுகூர்ந்து தர்ப்பணம், சிரார்த்தம், தானம் மற்றும் இறைவழிபாடு செய்வதற்கான முக்கியமான காலமாக இந்து மரபில் கருதப்படுகிறது.

இந்திய அரசின் சுற்றுலாத்துறை வெளியிட்டுள்ள நிகழ்வு தகவலிலும் மகாளய அமாவாசை “சர்வ பித்ரு அமாவாசை”, “பித்ரு மோக்ஷ அமாவாசை” மற்றும் “பித்ரு அமாவாசை” என்ற பெயர்களாலும் குறிப்பிடப்படுவதாகவும், முன்னோர்களுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கருதப்படுவதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மகாளய அமாவாசை என்றால் என்ன?

மகாளயம் என்பது பித்ருக்களைப் பெருமளவில் நினைவுகூறும் காலத்தையும், அமாவாசை என்பது சந்திரன் சூரியன் ஒரே நீளவட்டப் பகுதியில் அமைந்து சந்திரனின் ஒளிப்பகுதி பூமியிலிருந்து பெரும்பாலும் தெரியாத திதியையும் குறிக்கிறது. பாரம்பரிய இந்து நாட்காட்டியில் பித்ருபக்ஷத்தின் இறுதி அமாவாசையே சர்வபித்ரு அமாவாசை/மகாளய அமாவாசை என அழைக்கப்படுகிறது.

மரபுப்படி, குடும்ப முன்னோர்களின் குறிப்பிட்ட இறப்பு திதி தெரியாதவர்கள் அல்லது அந்தந்த திதியில் சிரார்த்தம் செய்ய இயலாதவர்கள், இந்த நாளில் பொதுவாக அனைத்து பித்ருக்களையும் நினைவுகூர்ந்து தர்ப்பணம் செய்வது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இது குறிப்பாக பித்ரு நினைவு, நன்றியுணர்வு மற்றும் குடும்ப மரபுத் தொடர்ச்சியை வலியுறுத்தும் சடங்காகப் பார்க்கப்படுகிறது.

## 2026ஆம் ஆண்டில் மகாளய அமாவாசை

சென்னை பகுதிக்கான திருக்கணித பஞ்சாங்கக் கணக்கீட்டின்படி, 2026 அக்டோபர் 10, சனிக்கிழமை அன்று அசுவினி/ஆஸ்வின கிருஷ்ண அமாவாசை நிகழ்கிறது. அமாவாசை திதி அக்டோபர் 9 இரவு 9:35 மணியளவில் தொடங்கி, அக்டோபர் 10 இரவு 9:19 மணியளவில் முடிவடைகிறது என்று சென்னை பகுதிக்கான கணக்கீடு தெரிவிக்கிறது.

தர்ப்பணம்/சிரார்த்தத்திற்கான துல்லியமான நேரம் குடும்ப சம்பிரதாயம், வேதசாகை, உள்ளூர் சூரியோதயம் மற்றும் அந்தந்த பஞ்சாங்க முறையைப் பொறுத்து மாறக்கூடும். எனவே தனிப்பட்ட சடங்குகளுக்கு குடும்ப புரோகிதர் அல்லது சம்பிரதாயத்தைப் பின்பற்றும் ஆசாரியரின் ஆலோசனையைப் பெறுவது சிறந்தது.

## மகாளய அமாவாசையில் பித்ரு தர்ப்பணம்

பாரம்பரியமாக தர்ப்பணத்தில் எள் (தில்), நீர் மற்றும் தர்ப்பைப் புல் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. குடும்ப சம்பிரதாயத்திற்கேற்ப பித்ருக்களின் பெயர், கோத்திரம் மற்றும் உறவு முறை நினைவுகூறப்படுகிறது.



## இந்தியப் பாரம்பரிய ஜோதிடத்தில் மகாளய அமாவாசை

ஜோதிடக் கண்ணோட்டத்தில் திதி என்பது சந்திரன் சூரியன் இடையிலான கோணத் தொடர்பை அடிப்படையாகக் கொண்ட கால அலகாகும். அமாவாசை என்பது ஒரு சந்திரச் சுழற்சியின் முடிவைக் குறிக்கும் முக்கிய திதியாகும். பாரம்பரிய ஜோதிடத்தில் பித்ரு தொடர்பான ஆய்வுகளில் பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்படுகின்றன:

**ஜோதிடக் காரணி பாரம்பரிய விளக்கம்**

| | | |
|---|---|---|
| சூரியன் | : | பித்ரு/தந்தைத் தத்துவத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. |
| சந்திரன் | : | மனம், நினைவு, குடும்ப உணர்வு மற்றும் தாய்வழி மரபுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. |
| 9ஆம் பாவம் | : | பித்ரு, தர்மம், குரு, பாக்கியம் ஆகியவற்றின் முக்கிய பாவமாகக் கருதப்படுகிறது. |
| 5ஆம் பாவம் | : | பூர்வ புண்ணியம், சந்ததி, மந்திரம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. |
| சூரியன்–ராகு–கேது | : | சில ஜோதிட மரபுகளில் பித்ரு தொடர்பான தோஷ விளக்கங்களில் பயன்படுத்தப்படுகின்றன. |
| அமாவாசை | : | பித்ரு தர்ப்பணம் மற்றும் முன்னோர் நினைவு சடங்குகளுக்குப் பாரம்பரிய முக்கியத்துவம் பெறுகிறது. |

பொதுவான ஆன்மீக அமைப்பு ஸ்நானம், சங்கல்பம், பித்ரு ஆவாஹனம், திலதர்ப்பணம், பித்ரு ஸ்மரணம், பிரார்த்தனை, தானம் எனக் கூறலாம். ஆனால், தர்ப்பணம் ஒரு வேத/குடும்ப சம்பிரதாயச் சடங்கு என்பதால், யார் செய்ய வேண்டும், எந்த மந்திரம், எத்தனை முறை, எந்த திசை, எந்தப் பொருட்கள், எந்த கோத்திரப் பிரயோகம் போன்றவை குடும்ப சாஸ்திர மரபுக்கு ஏற்ப மாறலாம்.

மகாளய அமாவாசையில் பித்ரு தர்ப்பணத்துடன் பின்வரும் வழிபாடுகளையும் பக்தர்கள் மேற்கொள்ளலாம்:

காலையில் புனித நீராடி தூய்மையான உடை அணிந்து குடும்ப மரபுப்படி பித்ரு தர்ப்பணம் செய்தல் வேண்டும். பின்னர் *"ஓம் நமோ நாராயணாய"* எனும் அஷ்டாக்ஷர மந்திர ஜபம், விஷ்ணு சஹஸ்ரநாமம், காயத்ரி பித்ரு தர்பண பாராயணம், திருக்கோயில் தரிசனமும், பெருமாளுக்கு துளசி சமர்ப்பித்து நாராயண வழிபாடும் செய்து, முன்னோர்களின் நினைவாக தானமும் செய்தல் வேண்டும். இரவு முன்னோர்களை நினைவு கூர்ந்து குடும்பப் பிரார்த்தனை செய்ய வேண்டாம்.

## மகாளய அமாவாசையின் சமூக மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம்

மகாளய அமாவாசை வெறும் ஜோதிடச் சடங்காக மட்டும் இல்லாமல், இந்திய சமூகத்தில் முன்னோர்களை நினைவுகூறுதல், குடும்ப வரலாற்றைப் பாதுகாத்தல், நன்றியுணர்வு, தானம், அன்னதானம் மற்றும் தலைமுறைகளுக்கு இடையிலான உறவு ஆகியவற்றை வலுப்படுத்தும் ஒரு பண்பாட்டு நிகழ்வாகவும் விளங்குகிறது.

முன்னோர் நினைவு என்பது நாம் தனி நபர்களல்ல; பல தலைமுறைகளின் தொடர்ச்சியாக உருவானவர்கள் என்ற குடும்ப சமூக தத்துவத்தை வலியுறுத்துகிறது.

## முடிவுரை

மகாளய அமாவாசை இந்தியப் பாரம்பரியத்தில் முன்னோர்களை நினைவு கூறும் ஆழமான ஆன்மிக நாளாக விளங்குகிறது. ஜோதிடத்தில் இது அமாவாசை திதியின் முக்கியத்துவத்துடன் தொடர்பு உடையது; தர்ம மரபில் பித்ரு கடமை மற்றும் நன்றியுணர்வுடன் தொடர்பு உடையது. ஆகவே, மகாளய அமாவாசையை "பயம் மற்றும் தோஷ நிவாரண நாள்" என்ற குறுகிய கண்ணோட்டத்தில்

## 2026, நவம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 08 | நரக சதுர்தசி, தீபாவளி பண்டிகை. |
| 09 | ஸ்ரீகேதார கௌரி விரதம். |
| 11 | திருமலை நம்பி சாத்துமுறை. |
| 13 | நாகுல சதுர்த்தி, மணவாள மாமுனிகள் சாத்துமுறை. |
| 16 | திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம். |
| 20–24 | நாராயணவனம், ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 21 | கைசிக துவாதசி. |
| 24 | திருமலை ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபம், திருமங்கையாழ்வார் திருநட்சத்திரம். |
| 25 | திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம். |
| 27 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷ வில்வ அர்ச்சனை. |

பார்ப்பதை விட, "முன்னோர் நினைவு + தர்மம் + பகவத் பக்தி + தானம் + குடும்பப் பண்பாட்டு தொடர்ச்சி" என்ற முழுமை யான இந்திய பாரம்பரியக் கண்ணோட் டத்தில் அணுகுவது பொருத்தமானது ஆகும்.

"தேவர்கள் மற்றும் பித்ருக்களுக்கு உரிய கடமைகளில் அலட்சியம் காட்டக் கூடாது. தாயைத் தெய்வமாகக் கருது; தந்தையைத் தெய்வமாகக் கருது; ஆசாரியரைத் தெய்வமாகக் கருது; விருந்தினரைத் தெய்வமாகக் கருது" (தைத்திரிய உபநிஷத், சிக்ஷா வல்லி 1.11.2.) என உபநிடதம் கூறுகிறது. முன்னோர்களுக்குரிய கடமையை மறவாமையே பித்ரு தர்மத்தின் அடிப்படையாகும்.

தைத்திரிய உபநிஷத்தின் அதே பகுதியில் தானம் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதற்கான முக்கியமான கருத்து உள்ளது. "சிரத்தையுடன் கொடுக்க வேண்டும்; சிரத்தையின்றிக் கொடுக்கக் கூடாது; வளத்துடன் கொடுக்க வேண்டும்; பணிவுடன் கொடுக்க வேண்டும்; பொறுப்புணர்வுடன் கொடுக்க வேண்டும்; புரிதலுடன் கொடுக்க வேண்டும்" (தைத்திரிய உபநிஷத், சிக்ஷாவல்லி 1.11.3.) என்கிறது. சிரத்தையுடன் செய்யப்படும் தர்ப்பணமும் தானமும் முன்னோர் நினைவின் அறச்சின்னம் ஆகும்.

### மகாளய அமாவாசைக்கான சுருக்கமான வாசகம்

பித்ருக்களை நினைவுகூறுகிறோம்; பித்ருக்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம்; பித்ருக்களுக்கு எங்கள் சிரத்தையை அர்ப்பணிக்கிறோம். எள்ளும் நீரும் கொண்டு பித்ருக்களை நினைத்து, நன்றியுடன் தர்ப்பணம் செய்து, தர்மத்துடன் தானம் செய்து, முன்னோர் நல்வழியைத் தொடர்வோம். தேவ பித்ரு கடமைகளில் அலட்சியம் காட்டாதே; பித்ருக்களைத் தெய்வமாகப் போற்று (தைத்திரிய உபநிஷத், சிக்ஷாவல்லி, அனுவாகம் 11, மந்திரம் 2.).

### பித்ரு தர்மத்திற்கான சிறந்த வாசகம்

"பித்ரு தேவோ பவ" மகாளய அமாவாசைக்கு மிகவும் பொருத்தமான குறுஞ்சுலோகமாகும். முன்னோர்களைத் தெய்வமாகப் போற்றுவோம் என்கிறது. முன்னோர் நினைவு கூறுவது என்பது கடந்த காலத்தை மட்டும் நினைவுகூறுவது அல்ல; தலைமுறைகளுக்கு இடையிலான தர்மப் பொறுப்பைத் தொடர்வதாகும்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**பக்தர்களின் கவனத்திற்கு...**

- திருமலைக்குச் செல்லும் மலைவழிப்பாதையில் வாகனத் திலோ, நடந்தோ செல்லும் பக்தர்கள் தேவையற்ற குப்பைகளை அதற்கான குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போடுங்கள். கண்ட இடங்களில் தூக்கி எறியாதீர்கள்.
- வனவிலங்குகள் வனத்தில் சுதந்திரமாகத் தமது உணவு களைப் பெற்றுக்கொள்ளும். ஆகையால் திருமலை வழிப் பாதையில் வனவிலங்குகளுக்கு உணவை அளிக்காதீர்.
- காடு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவா னது. எனவே காட்டினைப் பாதுகாத்து அடுத்தத் தலை முறையினருக்கும் நாம் அளித்திட வேண்டும்.
- திருமலை சாலைகளில் வனவிலங்குகள் சாலையை கடந்துச் செல்லக்கூடும். எனவே மலைவழிச் சாலையில் அதிவேகமாக வாகனங்களை ஓட்டாமல் கவனமாக ஓட்டுங்கள்.

# குறுக்கெழுத்துப் புதிர் -123

### இடமிருந்து வலம்

01. அக்ஷய திருதியை அன்று கொண்டாடப்படும் மகாவிஷ்ணுவின் அவதார நாள்...(9)
02. தூணில் தோன்றி, துஷ்டனை அழித்தத் தூயவனுக்காகக் கொண்டாடப்படும் நாள்...(10)
04. மார்கழி மூல நட்சத்திரத்து அன்றுகொண்டாடப்படுவது...(8)
10. மச்சமாக வந்த மஹாவிஷ்ணுவிற்காகக் கொண்டாடப்படுவது ...(4) ஜெயந்தி விழா.
15. ஆடி மாத பூச நட்சத்திர நாள் ...(11) அண்ணன் ஜெயந்தி.

### வலமிருந்து இடம்

05. பன்றி அவதார பரந்தாமனுக்குக் கொண்டாடப்படுவது...(7)
06. ஆலயங்களில் தோஷ சுத்திக்காக நடத்தப்படுகின்ற உற்சவம்...(8)
08. சித்திரை சித்திரை நட்சத்திரத்து அன்று கொண்டாடப்படுவது ...(5) ஆழ்வார் ஜெயந்தி விழா.
13. வானவர்களும் வந்து வணங்கிடும் வருடாந்திரப் பெருவிழா...(8)

### மேலிருந்து கீழ்

01. வைகாசியில் ஸ்ரீநிவாசருக்கும் பத்மாவதித் தாயாருக்கும் நடக்கின்ற மங்கள விழா...(8)
02. குதிரை முக பகவானுக்குக் கொண்டாடப்படுவது ...(10)
03. வைகுண்ட ஏகாதசி காலத்தில் நடக்கின்ற திவ்யப் பிரபந்த பாராயண உத்ஸவம்...(11)
06. கண்ணபிரானின் அண்ணனுக்குக் கொண்டாடப்படுவது...(4) ஜெயந்தி தினம்.
07. விஷ்ணுவின் ஆயுதங்களில் ஒன்றிற்குக் கொண்டாடப்படுவது...(5) தாழ்வார் ஜெயந்தி.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | |
| | | 2 | | | | | | | | | 3 |
| | | 4 | | | | | | | | | |
| | | | | | | | | | | | 5 |
| | | | | | | | | | | 6 | |
| | | | | | | | 7 | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | 8 | |
| | | | | | | | | | | | |
| | | | 16 | 9 | 12 | 10 | | | | 11 | |
| | | | | | | | | | | 13 | |
| 14 | 15 | | | | | | | | | | |

தொகுப்பு : திரு. டி.ஆர்.மனோகர், தஞ்சாவூர்,99426 44807

புதிருக்கான விடை 47ஆம் பக்கத்தில் உள்ளது.
வாசகர்கள் சரி பார்க்கவும்...

### கீழிருந்து மேல்

09. திருக்குளத்தில் நடைபெறும் விழா...(7)
11. தசரத குமாரனுக்குக் கொண்டாடப்படுவது ...(3) நவமித் திருநாள்.
12. கோடையில் கொண்டாடப்படுவது ...(4) உத்ஸவம்.
14. ஸ்ரீபெரும்புதூரில் சித்திரை திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தவருக்குக் கொண்டாடப்படுவது ஸ்ரீமத்...(4) ஜெயந்தி விழா.
15. மஹாலக்ஷ்மித் தாயாரை மகளாகப் பெற்ற மகரிஷிக்கான விழா...(11)
16. ஆண்டாள் நாச்சியார் அவதரித்த நாள்...(6)

தம் திவ்ய பிரபந்தங்களால் திருமாலின் திவ்ய தேசங்களைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள் ஆழ்வார் பெருமக்கள். அதேபோல, இராம காவியம் இயற்றிய கம்பர், மலையப்பனை, அவன் உறையும் திருமலையை உளமாறப் போற்றிப் பாடியிருக்கிறார் என்பது ஆனந்த மான தகவல்.

இராவணனால் சீதை அபகரித்துச் செல்லப்பட்டாள் என்பது உறுதியாகிவிட்டது. இனி உடனடியாகச் செயல் பட்டு அவனிடமிருந்து சீதையை மீட்க வேண்டும் என்று இராமன் தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அவன் சீதையைக் கடத்திச் சென்று எங்கே வைத்திருக்கிறான்? அந்த இடத்தை அடைவது எப்படி? அவள் அருகாமை யிலேயே இருக்கிறாளா அல்லது தொலை தூரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாளா? தேட வேண்டும்.

இராமனுக்கு உதவுவதற்காக அனுமன், சுக்ரீவன் மற்றும் அவனுடைய வானரப் படைகள் எல்லோரும் தயாராகக் காத்திருந்தார்கள். வாலி வதத்திற்குப் பிறகு கிஷ்கிந்தையின் மன்னனாகப் பொறுப்பேற்ற சுக்ரீவன், ஏற்கெனவே இராமனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி, சீதையைத் தேடுவதற்குத் தன் படைகளைத் திரட்டினான். அவர்களைப் பல குழுக்களாகப் பிரித்தான். ஒவ்வொரு குழுவினரையும் ஒவ்வொரு திசை நோக்கிப் பல பகுதிகளுக்கும் அனுப்பினான்.

அண்ணன் வாலியால் விரட்டப்பட்டு பல இடங்களில் பதுங்கி மறைந்து வாழ்ந்து வந்ததால் சுக்ரீவனுக்கு அந்தப் பகுதிகள் எல்லாம் நன்றாக நினைவிலிருந்தன. ஆகவே, தான் அனுப்பும் குழுக்களுக்கு அவர்கள் செல்லக் கூடிய பகுதிகள் எப்படிப்பட்டவை என்பதை விரிவாகச் சொல்லி, அனுப்பி வைத்தான்.

இந்த வகையில் தென்திசை நோக்கிச் செல்லும் படையினருக்குப் பல அறிவுரைகள் தந்தான். “முதலில் விந்திய மலையைப் பார்ப்பீர்கள். அங்கு சீதையைத் தேடுங்கள். அடுத்து நருமறை ஆறு, ஏமகூடம் என்ற மலை, அதற்கு அடுத்து பெண்ணை ஆற்றங்கரையெங்கும் தேடுங்கள். சிலநாள் பயணத்தில் விதர்ப்ப நாட்டை அடைவீர்கள். தொடர்ந்து பயணிக்க, தண்ட காரண்யம் என்ற வனப்பகுதியையும், அங்கே முண்டகத்துறை என்ற சோலையையும் அடைவீர்கள்.

இங்கும் சீதை காணக்கிடைக்க வில்லையா, மேலும் முன்னோக்கிச் சென்றீர்க ளானால், நெடிதுயர்ந்த பாண்டு மலை. அதற்கும் சற்றுத் தொலைவில் கோதாவரி ஆறு. இந்தப் பகுதியில் சுற்றித் தேடுங்கள், இல்லையா, அடுத்து, சுவண நதிக்கரை, அடுத்து சூரியகாந்தமலை, சந்திர காந்த மலை, இவற்றையும் கடந்து கொங்கண நாடு மற்றும் குவிந்த நாடு இரண்டையும் அடுத்தடுத்து அடைவீர்கள். இங்கெல்லாம் தேடியும் கிடைக்க வில்லையா, சற்றுத் தொலைவில் அருந்ததி மலை, மரகத மலை இரண்டையும் பார்ப்பீர்கள்.

கேட்டுக் கொண்டே வந்த வானரர்களுக்கு அவன் பேசியதே அத்தனை இடங்களையும் போய்ப் பார்த்த களைப்பை உண்டாக்கியது.

# திருமலை புகழ்பாடும் இராமாயணம்

– திரு. பிரபு சங்கர்



அதைப் புரிந்து கொண்ட சுக்ரீவன் சொன்னான். “சோர்வு அடையாதீர்கள். உங்களுடைய இத்தனைத் தேடல் முயற்சிகளால் ஏற்படும் உடல் வருத்தம், அது வரை சீதையைக் காணக் கிடைக்காத மன வருத்தம் இரண்டையும் போக்கவல்ல அற்புதமான மலை ஒன்று இருக்கிறது. அங்கே நீங்கள் சென்றீர்களா னால் புத்துணர்வு பெறுவீர்கள், புது உற்சாகத் துள்ளலுடன், சீதையைத் தேட மேலும் உத்வேகம் பெறுவீர்கள்.” “அட, என்ன மலை அது?” வானரர்கள் சுறுசுறுப்படைந்து கேட்டார்கள்.

*வட சொற்கும் தென் சொற்கும் வரம்பிற்றாகி*
*நான் மறையும் மற்றை நூலும்*
*இடை சொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்*
*நல்லறத்திக்கு ஈறாய்... தண் சாரல் ஓங்கிய*
*வேங்கடத்தில் சென்று அடைதிர் மாதோ!*

அதுதான் திருவேங்கட மலை. இது வட பகுதிக்கும், தென் பகுதிக்கும் நடுநாயகமாக, கம்பீரமாக நிற்கிறது. சுற்றிலும் பசுமை பொங்கும் சோலைகளையும், குளிர்ச்சி மிக்க குன்றுகளையும் கொண்டது. நான்கு வேதங்களும், அனைத்து சாத்தி ரங்களும் கூறிய எல்லா உயர் பொருட்களுக்கும் மேலானதாக சிறப்பு வாய்ந்த அறங்களுக்கு எல்லாம் சிகரமாகவும், உவமை சொல்லி ஒப்பிட இயலாத பீடு மிக்க அந்த மலையில் போய்த் தேடுங்கள்.

*இருவினையும் இடைவிடா எவ் வினையும்*
*இயற்றாதே இமையோர் ஏத்தும்*
*திருவினையும் இடு பதம் தேர் சிறுமையையும்*
*முறை ஒப்பத் தெளிந்து நோக்கி*
*கரு வினையது இப் பிறவிக்கு என்று உணர்ந்து*
*அங்கு அது களையும் கடை இல் ஞானத்து*
*அரு வினையின் பெரும் பகைஞர் ஆண்டு உளர்*
*ஈண்டு இருந்தும் அடி வணங்கர்பாலார்*

இந்த மலையில் அருட்பெரும் ஞானியர் உறைகிறார்கள். மாறி மாறி வரக்கூடிய நல்வினை, தீவினைகளுக்கிடையேயும், நிறைந்த செல்வம் உடையோர் மற்றும் இரந்து வாழும் இழி வாழ்க்கை கொண்டோருக்கிடையேயும் வாழ்ந்து இருநிலை களையும் சீர்தூக்கிப் பார்த்து “இப்பிறவியைப் பெற்ற தற்கு இத்தகைய இரு வினைகளே காரணம்” என் பதைத் தெளிவாக உணர்ந்து, அவ்வினைக ளுடனான தொடர்பை முற்றிலுமாக அறுத்தெறிந்து விடும் ஞானத் திருவுடைய, ஒழுக்கத்தால் சிறந்து விளங்கும் ஞானியர் அங்கே வாழ்கிறார்கள். அவர்கள் அருகில் செல்ல வேண்டும் என்பதில்லை; அவர்கள் இங்கிருந்த படியே மானசீகமாகத் தொழத் தக்கவர்கள்.

இங்கே ஆற்றங்கரை படித்துறைகளில், சூது இல்லா அந்தணர்கள் நீராடுகிறார்கள். வேதங்களை யும், தொன்மையான சாத்திரங் களையும் நன்கு உணர்ந்த பெருந்தவ முனிவர்கள் ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். மேகங்கள் தொட்டுச் செல்லும் அளவுக்கு உயர்ந்த மணி மாடங்கள் இத்தலத்துக்கு எழிலூட்டுகின்றன. தேவ கன்னியர் இசைக்கும் கானத்துக்கு ஒப்பான கின்னரம் எனும் நரம்பிசைக் கருவியின் தழுவலாய் இங்கே இன்னிசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தமக்குள் எந்தப் பகையுமின்றி, யானைக் கன்றுக ளும், புலிக்குட்டிகளும் விளையாடி மகிழும் அற் புதத் திருத்தலமே திருவேங்கடம் என்று கூறு கின்றான். மேலும் தொடர்ந்து கூறலானான்.

*கோடு உறு மால் வரை அதனைக்குறுகுதிரேல்*
*உம் நெடிய கொடுமை நீங்கி வீடு உறுதிர்*
*ஆதலினால் விலங்குதிர்*

பல சிகரங்களைக் கொண்ட அந்த பிரம்மாண்ட மலையை நீங்கள் அடைந்தீர்கள் என்றால், உங்களுடைய பாபங்கள் எல்லாம் நீங்கப் பெற்று முக்தியும் அடைவீர்கள். ஆமாம், அத்தகைய அற்புதத் தலம் அது. ஆனால், நீங்கள் முக்தி

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரி யில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலகப் பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப்படுத்தவும். மேலும், chiefeditortpt@gmail.com எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

பெற்றுவிட்டீர்களானால், பிறகு சீதையைத் தேடும் பணி தடைபட்டு விடுமே! அதனால் உடனே அந்தத் தலத்தை விட்டகன்று, நீர்வளம் மிக்க தொண்டை நாட்டுக்குப் போய் விடுங்கள். அங்கே தேடுங்கள். அதன் பிறகு, பெருமை வாய்ந்த, பொன்னி என்று அழைக்கப்படும், குளிர்ச்சி மிகுந்த காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் தேடுங்கள்.

மன்னன் சுக்ரீவன் விவரித்ததைக் கேட்டு வானரப் படைகள் பெரிதும் மகிழ்ந்தன. இத்தகைய அற்புதங்களைக் கொண்ட திருவேங்கடத்தை உடனே தரிசிக்க ஆவல் கொண்டன. ஆனால் அதற்கு முன்னால் எத்தனை இடங்களில் சீதையைத் தேட வேண்டியிருக்கிறது! ஒருவேளை திருவேங்கடத்தை தரிசிக்கும் முன்னாலேயே சீதையைக் கண்டுவிட முடியுமோ? அப்படியானால் திருமால் உறையும் திருவேங்கடத்தைத் தரிசிக்க முடியாமலேயே போய்விடுமே! ஆனாலும் உற்சாகம் பீறிட, பெருத்த ஆரவாரத்துடன் அவை சுக்ரீவனை வணங்கிவிட்டுப் புறப்பட்டன.

காடு, மலை, வனம், நகரம் என்று எல்லாவற்றையும் கடந்தும் சீதையை அறிய முடியாததால், இந்த சந்தர்ப்பம் தமக்குத் திருமாலே அளித்த வரம் என்று பெரிதும் மகிழ்ந்து, திருவேங்கட மலையை அடைந்தன. இத்தகைய புனிதத் தலத்திலா சீதை சிறை வைக்கப்பட்டிருப்பாள் என்று சந்தேகமும் கொண்டன. அங்கே அவை கண்ட காட்சிகள்தான் என்ன?

*முனைவரும் மறை வலோரும் முந்தை நாள் சிந்தை மூண்ட*
*வினைவரும் நெறியை மாற்றும் மெய் உணர்வோரும் விண்ணோர்*
*எனைவரும் அமரர் மாதர் யாவரும் சித்தர் என்போர்*
*அனைவரும் அருவி நன்னீர் நாளும் வந்து ஆடுகின்றார்*

அங்கே முனிவர்களும், வேதம் கற்ற அந்தணர்களும் தெய்வீக நெறி பரப்பிக் கொண்டிருந்தார்கள். முற்பிறப்பில் செய்த தீவினையால் உண்டாகும் நரக வேதனையை ஒழிக்கவல்ல தத்துவ ஞானிகளும் காணப்பட்டார்கள். அனைத்து தேவர்களும், தெய்வ மகளிரும், சித்தர்கள் அனைவரும் இந்தத் திருவேங்கட மலையில் வீழும் அருவிகளில் உளம் களிக்க நீராடுகிறார்கள். அங்கே தவம் புரிபவர்கள் எத்தகையவர்கள்? தம் உடலில் உள்ள ஐம்பொறிகளையும் அடக்கியவர்கள், காமத்தை வென்றவர்கள், பிறருடைய அவதூறுகளால் பாதிக்கப்படாதவர்கள். இளம் பெண்கள் வாள் போன்ற கண்களால் ஏவும் கணைகளை அலட்சியமாக ஒதுக்கி தன்னிலை மாறாதிருப்பவர்கள் இவர்கள் அல்லவோ அங்கே தவம் இயற்றுகிறார்கள்!



வெற்றியுடைய சக்கராயுதத்தைத் தரித்த, கார் மேகம் போன்ற கரிய நிறமுடைய எம்பெருமானான திருமாலின் திருவடிகள் பதிந்த திருத்தலம் இந்தத் திருவேங்கடம். இம்மலையில் வாழும் விலங்குகளும் கூட வீடு பேறு பெறுகின்றன. அப்படி என்றால் நெறி பிறழா நல்லோர்க்கு அப்பேறு கிட்டாமலா போய்விடும்?

*ஆய குன்றினை எய்தி அருந்தவம்*
*மேய செல்வரை மேயினர் மெய்ந் நெறி*
*நாயகன் தனை நாளும் வணங்கிய*
*தூய நன்மலர்ப் பாதங்கள் சூடினார்*

இத்துணை பெருமை பெற்ற திருவேங்கட மலையை வானரர்கள் கண்டு களித்தார்கள். திருமாலை நாள்தோறும் வழிபட்டு, பக்தி செலுத்திய தூய துறவியர்களைக் கண்டு அவர்கள் அடி தொழுது பணிந்தார்கள். மேலும், மெய்நெறி நாயகன் என்பதன் மூலம் வீடு பேற்றிற்கு வழி கோலும் நாயகன் திருவேங்கடவன் என்பதையும் அறியமுடிகிறது. இவ்வாறு இராமாயணத்தில் சிறப்பு செய்யப்பட்டிருக்கிறது திருவேங்கட மலை.



# திருமலையப்ப ஸ்வாமி நவராத்திரி பிரம்மோத்ஸவம்
## 12-10-2026 முதல் 20-10-2026 வரை

12-10-2026
திங்கட்கிழமை
பகல்:திருச்சி உத்ஸவம்
இரவு:பெரிய சேஷ வாகனம்

13-10-2026
செவ்வாய்க் கிழமை
பகல்:சிறிய சேஷ வாகனம்
இரவு:ஹம்ஸ வாகனம்

14-10-2026
புதன் கிழமை
பகல்:சிம்ம வாகனம்
இரவு:முத்துப்பந்தல் வாகனம்

15-10-2026
வியாழக்கிழமை
பகல்:கல்ப விருக்ஷ வாகனம்
இரவு:சர்வ பூபால வாகனம்

16-10-2026
வெள்ளிக் கிழமை
பகல்:மோகினி அவதாரம்
இரவு:கருட சேவை

17-10-2026
சனிக்கிழமை
பகல்:ஹனுமத் வாகனம்
மாலை:புஷ்பக விமானம்
இரவு:யானை வாகனம்

18-10-2026
ஞாயிற்றுக்கிழமை
பகல்:சூரியப்பிரபை வாகனம்
இரவு:சந்திரப்பிரபை வாகனம்

19-10-2026
திங்கட்கிழமை
பகல்:தங்கத்தேர்
இரவு:குதிரை வாகனம்

20-10-2026
செவ்வாய்க் கிழமை
பகல்:திருச்சி உத்ஸவம்,
ஸ்நபன திருமஞ்சனம்,
சக்கரஸ்நானம்





# திருச்சானூர் ஶ்ரீபத்மாவதித்தாயார் நவராத்திரி உத்ஸவம்
## 12-10-2026 முதல் 20-10-2026 வரை






# திக்கெங்கும் தரிசிப்போம் திருவேங்கடவனை

இந்த ஆலயங்களின் கூடுதல் விவரங்களை www.tirumala.org (or) ttdevasthanams.ap.gov.in என்ற இணைய தளம் வாயிலாக அறியலாம்.

***திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.***

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

## ஸ்ரீ லக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - தேவுனிகடபா

பழமையான இவ்வாலயம் கடப்பா நகரத்தில் இருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் தேவுனிகடபா வில் அமைந்துள்ளது. "கடபா" என்றால் "வாசல்" அல்லது "நிலைப்படி" என்று பொருள். இங்குள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் விக்ரகம் கிருபாசாரியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்று கூறப்படுகிறது. இங்கு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு பின்புறம் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமியின் விக்ரகம் அமைந்து உள்ளது. திருமலை "வராக க்ஷேத்திரம்" என்றும், தேவுனிகடபா "ஹனுமத் க்ஷேத்திரம்" என்றும் அழைக்கப்படுகிறது.

தாள்ளப்பாக்கம் அன்னமய்யா இத்தலப் பெருமானை வழிபட்டு, அவரை "கடப்பராயர்" என்றும், "வேங்கடாத்ரி கடப்பராயர்" என்றும் புகழ்ந்து பாடியுள்ளார். பண்டைய காலத்தில் திருப்பதிக்கு வரும் யாத்ரீகர்கள் செல்லும் நுழைவு வழி இதுவே ஆகும். தேவுனிகடபாவில் உள்ள ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வரரைத் தரிசித்த பிறகே திருமலை இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஒரு பாரம்பரியம் இங்கு உள்ளது. இப்பாரம்பரியம் இன்றும் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, திருமலைக்குச் செல்லும்முன் முதலில் இக்கோயிலுக்கு வருகை தந்து இறைவனின் அருளைப் பெறுவர்.

கல்வெட்டுகளின்படி, இக்கோயிலின் ராஜ கோபுரமும், திருப்பதியில் உள்ள ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயிலின் கோபுரமும் ஒரே காலகட்டத்தில் கட்டப்பட்டவையாகும். ஆண்டுதோறும் மாசி மாதம் நடைபெறும் தேரோட்டம் பக்தர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும்.









**அமைவிடம்**

திருப்பதியிலிருந்து கோடூர் மற்றும் ஒண்டிமிட்டா வழியாக தேவுனிகடபாவிற்கு ஆந்திர மாநில அரசு பேருந்து வசதிகள் உள்ளன. மேலும் திருப்பதி மற்றும் ரேணிகுண்டா விலிருந்து ரயில் வசதிகளும் உண்டு. திருப்பதி, சித்தூர், அனந்தபூர், நெல்லூர், கர்னூல், ஹைதராபாத், விஜயவாடா, ஸ்ரீசைலம், பெங்களூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் இருந்து கடப்பாவிற்கு பேருந்து சேவைகள் உள்ளன.

**ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - தொண்டைமான்புரம்**

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில், தொண்டை மண்டலத்தை ஆட்சிபுரிந்த மன்னரான தொண்டைமான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. இக்கோயில் 2008–ஆம் ஆண்டு தி. தி. தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. பாஞ்சராத்ர ஆகமம்படி பூஜைகள் நடத்தப்படுகின்றன.

ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் லீலைகளைப் பாராட்டி தாள்ளப்பாக்கம் அன்னமய்யா கீர்த்தனை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''தொம்முலு சேசின யட்டி தொண்டைமான் சக்கரவர்த்தி ரம்மன்ன சோடிகி வச்சி நம்மின வாடு''

மேற்கண்ட பாடலில் "ஆகாச ராஜனின் மகனான வாசுதேவனுக்கு ஆதரவாக ஸ்ரீநிவாசன் தானாக முன்வந்து தொண்டைமானுடன் போரில் (தொம்மி) ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. அதேபோல், "ரம்மன்ன சோடிகி" என்பது, ஸ்ரீநிவாசன் தொண்டமநாட்டில் உள்ள தொண்டைமானின் இல்லத்திற்கு வருகை தந்தார்'' என்ற பொருளைத் தெளிவாகத் தருகிறது.

வரலாற்றின்படி,ஆகாச ராஜனின் சகோதரரான தொண்டைமான், தொண்டம நாட்டை ஆன்மீக நெறியுடனும், தொண்டு மனப் பான்மையுடனும் ஆட்சி செய்து வந்தார்; அவர் திருமலைக்குச் சென்று திருவேங்கடமுடையானுக்குச் சேவை செய்துவிட்டு, மீண்டும் தொண்டமநாட்டிற்குத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். முதுமை அடைந்து, திருமலைக்குச் செல்ல முடியாமல் போனபோது, சேவையைத் தொடர முடியாத தனது வருத்தத்தை இறைவனிடம் வெளிப்படுத்தினார். தொண்டைமானின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட ஸ்ரீநிவாசன், தொண்டைமானுக்குத் தொடர்ந்து சேவை செய்யும் வாய்ப்பை வழங்குவதற்காக, ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் தொண்டைமானின் இல்லத்திற்கே வருகை தந்தார். அதனால், ஸ்வாமியை "வீட்டில் இருந்த பெருமாள் ஸ்வாமி" என்று தொண்டைமான் அழைத்ததாகத் தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

திருமலையில் ஆனந்த நிலையத்தைத் தொண்டைமான் கட்டியதால், அவரது இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள இக்கோயிலின் விமானமும் அதே வடிவத்திலும் அமைப்பிலும் உள்ளது. மேலும், ஸ்ரீநிவாசன் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் அபய ஹஸ்த முத்திரையுடன் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார்.

தொண்டமநாட்டில் இக்கோயிலுக்கு அருகில் உள்ள பெரிய ஏரிக்கு வரும் நீர், திருமலையில் உள்ள ஆகாசகங்கையிலிருந்து வருவதாகவும், இந்த ஏரியின் நீர் இக்கோயில் அபிஷேகம் மற்றும் பிற கைங்கரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. இந்த ஏற்பாடு தொண்டைமானின் ஆட்சிக் காலத்தில் இருந்தே செய்யப்பட்டு வருகிறது. கோயிலின் கருவறை (அந்தராளம்) கதவு நிலைகளில் தொண்டைமான் கைகூப்பி வணங்கும் நிலையில் உள்ள சிலையை நாம் காணலாம். தொண்டமநாடு கோயிலில் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் அபய ஹஸ்த நிலையில் உள்ள ஸ்ரீவேங்கடேஸ்வர



ஸ்வாமியைத் தரிசிப்பது, பக்தர்களுக்கு மன அமைதியை வழங்குவதோடு, அனைத்து விருப்பங்களையும் நிறைவேறும் என்று கூறப்படுகிறது.

## அமைவிடம்

இக்கோயில் திருப்பதியில் இருந்து 33 கி.மீ. தொலைவிலும், ஸ்ரீகாளஹஸ்தியில் இருந்து 7 கி.மீ. தொலைவிலும் அமைந்து உள்ளது.

## ஸ்ரீ நாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - ஜம்மலமடுகு

முன்னோர்களின் கூற்றுப்படி, கடப்பா மாவட்டத்தில் உள்ள ஜம்மலமடுகு நகரத்தின் அருகில் பாயும் புனிதமான பென்னா நதிக்கரையில், அடர்ந்த நாவல் (ஜம்பு) மரங்களால் சூழப்பட்ட ஒரு பெரிய குளம் இருந்தது. காலப்போக்கில் இது "ஜம்புல மடுகு" என்பது மருவி "ஜம்மல மடுகு" என்று பிரபலமானது. தலபுராணத்தின்படி, ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி நரபுரய்யா என்ற பக்தரின் கனவில் தோன்றி, தமது விக்ரகத்தை நிறுவி பிரதிஷ்டை செய்யும்படி கேட்டுக் கொண்டார். அவர் மேற்கூறிய குளத்தில் ஸ்வாமியின் விக்ரகத்தைக் கண்டெடுத்து, அந்த விக்ரகத்தை நகரத்தின் வடக்கே உள்ள ஒரு மணல் மேட்டில் பிரதிஷ்டை செய்தார். எனவே, இக்கோயில் ஸ்ரீ நாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் என்று அழைக்கப்படுகிறது.

கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளின்படி, நரபுரய்யாவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில் காலப்போக்கில் சிதிலமடைந்திருந்தது; பின்னர் இது 1919-ஆம் ஆண்டு சில பக்தர்களின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்பட்டது.

## அமைவிடம்

திருப்பதியிலிருந்து ஜம்மலமடுகுவிற்கு ஆந்திர மாநிலப் பேருந்துகள் உள்ளன. மேலும், திருப்பதி மற்றும் ரேணிகுண்டாவிலிருந்து ரயில் வசதிகளும் கிடைக்கின்றன.




## ஸ்ரீ பிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - கொசுவாரிப் பள்ளி

இவ்வாலயம் திருப்பதியிலிருந்து சுமார் 85 கி.மீ. தொலைவில் உள்ள தம்பள்ளப்பள்ளி மண்டலம், கொசுவாரிப்பள்ளி என்ற சிறிய கிராமத்தில் அமைந்துள்ளது. முக்கியமான மற்றும் பழமையான இக்கோயில், சமீபத்தில் தி.தி. தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.



மூலவர் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியுடன், ஸ்ரீபத்மாவதித் தாயார் திருக்காட்சி அளிக்கின்றார். இங்குள்ள விக்ரகம் 12–ஆம் நூற்றாண்டில் வேங்கி சாளுக்கியர்களால் பிரதிஷ்டை செய்யப் பட்டது என்று கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. பின்னர், தொடர் ஆண்டு 1462–ல் விஜய நகரப் பேரரசர் ஸ்ரீஅச்சுத தேவ ராயரால் கட்டப் பட்டது. இது “திருவெங்கலநாதர் கோயில்” என்றும் அழைக்கப்படுகிறது. பாஞ்சராத்ர ஆகமப்படி பூஜைகள் நடத்தப்படுகின்றன.

**அமைவிடம்**

மதனபள்ளியிலிருந்து கொசுவாரிப்பள்ளிக்குச் செல்ல காலை 7:30 மணி, மதியம் 12:00 மணி, பிற்பகல் 3:00 மணி, மாலை 6:30 மணி ஆகிய நேரங்களில் பேருந்து வசதிகள் உள்ளன.

## ஸ்ரீ சந்தான வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் - அனந்தவரம்

குண்டூர் மாவட்டம், அனந்தவரத்தில் இப்பழமை வாய்ந்த ஸ்ரீ சந்தான வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் 2015–ஆம் ஆண்டு தி.தி.தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. இக்கோயிலின் சிறப்பு என்னவென்றால், இத்தலப் பெருமானை வழிபட்டால் குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் அருளுவார் என்று நம்புகின்றனர். கோயில் தல புராணத்தின்படி, ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி கர்லபூடி குன்றை அடைந்தபோது, கர்லபூடிக்கு கிழக்கே அமைந்துள்ள அனந்தாத்ரி குன்று, இறைவனைத் தாங்கும் திறன் தனக்கு இருப்பதால் அனந்தாத்ரியில் எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டது. மலையரசனின் வேண்டுகோளை ஏற்று, ஸ்வாமியும் அனந்தாத்ரியில் குடியேறினார்.

இக்கோயிலின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி மீசையுடன் காட்சியளிக்கிறார். உள்ளூர் மக்களால் இவர் “பாலபொங்கல ஸ்வாமி” என்றும், “கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி” என்றும் அழைக்கப்படுகிறார். பல்குண (மாசி–பங்குனி) மாதத்தில் சிவராத்திரி முதல் தெலுங்கு யுகாதி வரை முக்கிய திருவிழா நாட்களாகக் கொண்டாடப்படுகின்றன, மேலும், இக்காலகட்டத்தில் பிரம்மோற்சவங்களும் நடத்தப்படுகின்றன. விவசாயிகள் அந்த ஆண்டில் நல்ல மகசூல் பெற இறைவனின் இன்னருள் வேண்டி, தங்களின் முதல் அறுவடையில் கிடைத்த விளைச்சலை இத்தலப் பெருமானுக்குக் காணிக்கையாக அளிக்கின்றனர்.



**அமைவிடம்**

விஜயவாடா மற்றும் குண்டூரிலிருந்து துள்ளூரு வழியாக இக்கோயிலை அடைய லாம். ஆனால், ஆந்திர மாநில அரசு பேருந்து வசதி துள்ளூரு வரை மட்டுமே உள்ளது. துள்ளூருவிலிருந்து அனந்தவரம் கோயிலை அடைய சொந்த வாகனங் களைப் பயன்படுத்த வேண்டும்.

தொடர்ந்து தரிப்போம்...

இயல்பாக இருப்பது இயற்கை.இயற்கை மாறினால் உயிர்கள் வாழ இயலாது. அதனால் இயற்கையைத் தெய்வமாக நம் முன்னோர்கள் வணங்கி வந்தனர். நீர்நிலைகள், நிலம், அக்னி, காற்று, வான்வெளி இவற்றோடு மலைகள், காடுகள் என இயற்கையாக அமைந்த ஒவ்வொன்றும் வழிபாட்டிற்கு உரிய ஒன்றாயிற்று. இவற்றை மாசு படாமல்/படுத்தாமல் காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் திருமலையின் இயற்கை வளம் குறித்து முதலாழ்வார்கள் மூவரின் கருத்துக்களைத் தொகுத்துக் காண்போம்.

**முதலாழ்வார்கள்**

முதலாழ்வார்களின் அவதாரம் பக்தி கலந்த சிறப்புடையது. பொய்கையாழ்வார் காஞ்சியில் உள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் திருக்குளத்தில் பொற்றாமரை மலரில் திருவோணம் நட்சத்திரத்தில் அவதரித்தார். அடுத்த நட்சத்திரம் அவிட்டம் நாளில் மகாபலிபுரத்தில் தலசயனப் பெருமாள் கோயில் நந்தவனத்தில் குருக்கத்தி கொடி மலரில் பூதத்தாழ்வார் தோன்றினார். சென்னை மயிலை ஆதிகேசவப் பெருமாள் கோயில் கிணற்றில் செவ்வல்லி மலரில் சதயம் நாளில் பேயாழ்வார் அவதரித்தார். இவர்கள் மூவரும் அனுபவித்த திருமலையின் இயற்கை எழிலை நாமும் சிறிது அனுபவிப்போம்

**திருமலையின் எழில்**

*ஊரும்வரியரவம் ஒண்குறவர் மால் யானை*
*பேர எறிந்த பெருமணியை காருடைய*
*மின்னென்று புற்றடையும் வேங்கட மே* – முதல் திருவந்தாதி 38

மலைவாழ் குறவர்களின் மனைகளை நோக்கி யானைகள் வருகின்றன. அவைகளை விரட்டக் கற்களை வீசி எறிகின்றனர். அவ்வாறு வீசப்படும் கற்கள் கற்களாக இல்லாமல் இரத்தினங்களாக உள்ளன. இந்த ரத்தின ஒளியின் தாக்குதலுக்குப் பயந்த அரவங்கள் மின்னல் என நினைத்து அடுத்து இடி முழக்கம் வரும் என்றஞ்சி புற்றுக்குள் சென்றதாம். என்னே ஒரு கற்பனை.

திருமலை வளமையின் மிகுதிப்பாட்டை இதைக் காட்டிலும் எடுத்துரைக்க முடியுமா என்பது கேள்விக்குறி. மற்றுமோர் பாசுரத்தில்






முனைவர் ந. மைதிலி, சென்னை,
9884447886

யானையின் அச்சத்தைத் தெரிவிப்பது போல வேங்கட மலை வளத்தைக் காட்டுகிறார்.

*பெருவில்பகழிக் குறவர்கைச்செந்தீ*
*வெருவிப்புனம் துறந்த வேழம் இருவிசும்பில்*
*மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கட மே*

– இரண்டாம் திருவந்தாதி

குறவர்கள் மூட்டிய தீக்கு அஞ்சிய யானை அவ்விடம் விட்டு நீங்கி நடு இரவில் நடு காட்டில் நிற்கிறது. அப்போது எரிமீன் விழ மீண்டும் குறவர்கள் தீ மூட்டியுள்ளனரோ என்றஞ்சி நிற்கிறது. அவ்வளவு வானுயர் மலை திருமலை எனச் சொல்லும் பாங்கு அருமை.

*வெற்பென்று இருஞ்சோலை வேங்கட மென்று...*

– இரண்டாம் திருவந்தாதி 54

இதில் வரும் இருஞ்சோலை என்பதன் பொருள் "திருமலை வெறும் கற்பாறை மட்டுமல்ல. அடர்ந்த பசுமை நிறைந்த சோலைகளைக் கொண்டது என்பதைக் காண்கையில் எம்பெருமான் உறைகின்ற தலம் குளிர்ச்சியுடையது என்பதுடன் கல் போன்ற மனதுடையாரையும் கனிவிக்கும் தன்மை உடையது" என்பது அறியப்படுகின்றது. இக் கருத்தை நிறுவும் வகையில் *"வேயோங்கு தண்சாரல் வேங்கட மே"* (இரண்டாம் திருவந்தாதி 25) என்று மொழிவார்.

*பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று*
*இருகணிளமூங்கில்வாங்கி அருகிருந்த*
*தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்*

– இரண்டாம் திருவந்தாதி 75

இப்பாசுரம் வேங்கட மலையில் வாழும் களிற்றின் அன்பினைக் காட்டுகிறது. இரு கணுக்கள் கொண்ட இளமூங்கிலில் தேன் கலந்து தன் மடப் பிடிக்கு ஊட்டியதாம் களிறு. என்னே அன்பின் வெளிப்பாடு. இதேபோல் சங்க இலக்கியம் கலித் தொகையில் ஓர் அரிய காட்சி உள்ளது.

*சுனை வாய்ச் சிறுநீரை எய்தாது என்றெண்ணிப்*
*பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு*

பாலை நிலம் வறண்ட நீரில்லா நிலம். தாகத்தோடு வரும் களிறு மற்றும் பிடி. சுனையில் சிறிதளவு நீரே உள்ளது. களிறு தான் குடிப்பது போல பாவனை செய்ய மடப்பிடியை நீருண்ண வைத்ததாம். விலங்குகளிடத்தும் அன்புண்டு என்பதைக் காட்டிலும் ஆறறிவில்லா விலங்குகளே அன்புடன் வாழும் போது ஆறறிவு உற்ற மனிதனே அன்போடு வாழப் பழகு என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

*"கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி"* என்ற வரிகள் ஆண்டாளின் திருப்பாவையில் இடம் பெற்றவை. இதன் புராண வரலாறு என்ன? கம்சனால் கிருஷ்ணனைக் கொல்வதற்காக இரு அசுரர்கள்

## ஸப்தகிரி ஆகஸ்ட் 2026 விடைகள்

1. விராட ராஜன்.
2. யாதவப்ரகாசர்.
3. கீசகன்.
4. அருணகிரிநாதர்.
5. ஸ்வாமி வேதாந்த தேசிகர்.
6. மதுரகவியாழ்வார்.
7. திருவேங்கடமுடையான்.
8. வைகாசி, அனுசம்.
9. வகுளமாதா.
10. ஆடி, சுவாதி.
11. நாலடியார்.
12. ஆனி, சித்திரை.
13. பாரதியார்.
14. பிருஹன்னளை.
15. ஆண்டாள்.



வினாடி வினா

## போட்டி எண். 49

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் வி.கே.செந்தூர்குமரன், குகை, சேலம்.
2. செல்வி வேதிகாஸ்ரீ, ஆவடி, சென்னை.
3. செல்வன் ஆர்யா கிருஷ்ணா, கே.கே.நகர், சென்னை.

அனுப்பப்பட்டனர் . ஒருவன் வத்சாசுரன் மற்றவன் கபித்தாசுரன். வத்சாசுரன் கன்றாக உருமாறி ஆநிரைக ளோடே கலந்து விட்டான். கபித்தாசுரனோ ஒரு விளா மரமாக உரு மாறினான். இதையறிந்து கொண்ட கிருஷ்ண பகவான் கன்றின் காலைப்பிடித்து விளாமரத்தில் மோத வைத்து இருவரையும் கொன்று விட்டான். விளாமரத்துக் கனிகள் கீழே உதிர இதுயாதொன்றும் அறியாத கோபியர்கள் மற்றும் நண்பர்கள் விளாமரத்துப் பழத்தை உண்டு மகிழ்ந்தனர்.

பார்த்த கடுவன் சுனை நீர் நிழல் கண்டு
பேர்த்தோர் கடுவனெனப்பேர்ந்து கார்த்த
களங்கனிக்குக் கை நீட்டும் வேங்கடமே மேல் நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு

– மூன்றாம் திருவந்தாதி 68

இதனுள் திருமலையின் இயற்கை எழில், இங்கு வாழும் விலங்குகளின் சுபாவம். மேலும், மற்றுமோர் புராண நிகழ்வும் பதிவாகியுள்ளது. சுனை நீரின் தெளிவு காரணமாக ஆங்கு வந்த குரங்கொன்று தன் நிழலைப் பார்த்து பயந்து போய் ஆங்கு வேறோர் குரங்கு இருப்பதாக நினைக்கின்றது. பிறகு, சுனைக்கு அருகில் ஒரு களங்கனி மரத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்துக் கை நீட்டுகிறது. இப்போதும் சுனை நிழலில் அதன் தோற்றம் மற்றோர் குரங்கு தனக்குப் பழத்தைப் பறித்துத் தருவதற்காக கைநீட்டுகிறது என்று நினைத்து மகிழ்ச்சி அடைகிறது. முதலில் தன்னைப் பார்த்து நிழல் என்றறியா அக்குரங்கு பயம் கொள்கிறது. பிற்பாடும் நிழல் என்று அறியாது மகிழ்ச்சி அடைகிறது. வியப்பு என்னவென்றால் மனிதர்களாகிய நம்மனமும் அப்படிப்பட்டது தான். எது உண்மை எது பொய் என்று அறியாது குழம்பி உள்ளோம். அவற்றைத் தீர்த்து நல்வழி காட்டும் வேங்கடவன் வீற்றிருக்கும் திருமலை என்று இயற்கை எழிலோடு வாழ்க்கை தத்துவத்தை உணர்த்திய பாங்கு அருமை.

அப்படிக் கைநீட்டிய குரங்கு போலே முன்பு விளாமரமாக நின்ற அசுரனை, கன்றாக வந்த அசுரனை வைத்து இரு அசுரர்களையும் வதைத்த கிருஷ்ண பரமாத்மா இருந்த வேங்கட மலை என்று புராண நிகழ்வோடு அழகு படுத்தியுள்ள திறமை போற்றத்தக்கது.

இப்படியாக முதல் ஆழ்வார்கள் மூவர் வேங்கடமலையாம் திருமலையின் இயற்கை எழில்தனை பக்தி ரசம் தோய்த்து விளக்கி இருக்கும் தன்மையைப் படிக்குந்தோறும் புலகாங்கிதம் உறுகிறது. திருமலையின் எழிலோவியத்தை நேரில் கண்டு தரிசிக்க வாரீர்.




திருமலையைச் சாலை வழியாக வாகனங்கள் மூலம் சென்றடைய இரண்டு மலை வழிச்சாலைகள் உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. திருமலைக்கு பேருந்து பயணமே பாதுகாப்பானது. பக்தர்கள் கூடுமானவரை பேருந்து பயணத்தை மேற்கொள்ளுங்கள்.

ஆந்திர மாநில அரசு பேருந்துகளில் திருமலைக்குச் சென்று திரும்பி வருவதற்கு ஒரே பயண டிக்கெட்டு எடுத்தால் பயணச் சலுகை அளித்துள்ளார்கள்.

இந்த டிக்கெட் மூன்று நாட்கள்(72 மணி நேரம்) வரை செல்லுபடியாகும்.

மூத்த குடிமக்களுக்கு ஆதார் அட்டையைக் காண்பித்தால் டிக்கெட் கட்டணத்தில் கூடுதல் சலுகை கிட்டும்.



# “ ஸப்தகிரி ” இதழில் என் அனுபவங்கள்




திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிடும் “ஸப்தகிரி” பக்தி மாத இதழ் ஆன்மீக அன்பர்களுக்கு ஓர் அருமையான வரப்பிரசாதமாகும். இவ்விதழ் எனக்கு அறிமுகமானதே ஓர் ஆச்சர்யமான இனிய அனுபவம் ஆகும். என் மகனுக்கு 2017– நவம்பர் 24 ஆம் தேதி திருமணம் நடந்தது. திருமண அழைப்பிதழ்களை, எங்கள் குல தெய்வமான திருமலை திருப்பதி ஏழுமலையான் திருப்பாதத்தில் சமர்ப்பித்து ஆசீர்வாதம்பெற, நானும், என் கணவரும் திருமலைக்குச் சென்றோம். என் அப்பன் திருமலை வேங்கடவனைத் தரிசித்து, திருமண அழைப்பிதழை அவரின் இருப்பிடமான கோயிலில் வைத்து வணங்கி, அய்யனின் ஆசீர்வாதத்தை வேண்டி வணங்கினோம்.

அதன் பின்னர் என் கணவர் திருமலைக்குச் செல்லும் போதெல்லாம் சந்தித்து உரையாடி மகிழும் ஓர் ஆன்மீகப் பெரியவரை சந்திக்கலாம் எனக் கூற, கோயிலுக்கு இடப்புறமாக உள்ள ஓர் ஆலமரத்தருகில் அழைத்துச் சென்றார். அப்போது அவ்வன்பர் அம்மரத்தடியில் உள்ள சில ஸ்வாமி விக்ரகங்களுக்குப் பூஜைசெய்து வணங்கிக் கொண்டு இருந் தார். ஏற்கனவே அவ்வன்பருக்கு என் கணவர் அறிமுகமானவராகையால், இன் முகத்துடன் எங்களை வரவேற்றார். நாங்க ளும் அவ்வான்மீக அன்பரிடம் எங்கள் மகனின் திருமண அழைப்பிதழை வழங்கி மணமக்களை ஆசிர்வதிக்கும்படி கூறினோம். அவரும் அழைப்பிதழை அன்புடன் பெற்று ஆசீர்வதித்து மகிழ்ச்சி தெரிவித்தார். பின்னர் நாங்கள் ஊருக்குத் திரும்பினோம். எங்கள் மகனின் திருமணமும் இனிதே நடந்தேறியது. மணமக்களும் புதுமணத்தம்பதிகளாக திருமலை வந்து வேங்கடவனின் பாதம் பணிந்து வணங்கி விட்டு வந்தனர்.



என்னே விந்தை! 2017 டிசம்பர் மாத “ஸப்தகிரி” பக்தி இதழ் எங்கள் வீட்டு விலாசத்திற்கு தபாலில் வந்தது. நான் என் கணவரிடம், நீங்கள் “ஸப்தகிரி” இதழுக்கு சந்தா ஏதேனும் செலுத்தினீர்களா? என்று கேட்டேன். அவர் அப்படி எதுவும் நான் சந்தா செலுத்தவில்லையே என்று கூறினார். எப்படியோ “ஸப்தகிரி” பக்தி இதழ் நமக்குக் கிடைத்தது திருமலையானின் திருவருள் என்று நினைத்து இதழைப் படிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு பகுதியும் மிக அருமையாக திருமலையப்பனின் புகழையும், அருமையையும், திருமலையின் வரலாற்றையும், நாள்தோறும் திருமலையப்பனுக்கு நடைபெறும் உற்சவங்களையும் விஸ்தாரமாக விளக்கிக் கூறின.

உற்சவத் திருக்காட்சி புகைப்படங்களும் மிக அருமையாக இருந்தன. ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டேன். அடடா, இதற்குள் பக்திமலர் முழுவதும் படித்து முடித்துவிட்டோமா என்று வியப்படைந்தேன்.

“ஸப்தகிரி” சமய பக்தி மலர் மாதாமாதம் வரத் தொடங்கியது. அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். நாங்கள் திருமலையில் சந்தித்து என் மகனின் திருமண அழைப்பிதழ் கொடுத்து ஆசீர்வாதம் பெற்ற ஆன்மீக அன்பர்தான், அழைப்பிதழில் இருந்த எங்கள் விலாசத்திற்கு “ஸப்தகிரி” இதழ் கிடைக்க ஆவண செய்து

**– திருமதி இராஜகுமாரி வெங்கடேசன்,**
**ஆரணி, 9976238430**

உள்ளார் என்று. என்னே திருமலையானின் பேரருள்! இவ்வாறாக ஒரு வருடம் வரை “ஸப்தகிரி” கிடைக்கப் பெற்று படித்து மகிழ்ந்தேன்.

பின்னர் ஒருவருடம் கழித்து டிசம்பர் 2018 இதழ் எங்களுக்கு வரவில்லை. எனக்கோ அந்த ஒருமாதம் “ஸப்தகிரி” இதழ் கிடைக்காமல் போனதே என்று ஆதங்கமாக இருந்தது. நான் உடனே ஆயுள் சந்தா செலுத்தி மறுமாதத்தில் இருந்து “ஸப்தகிரி” இதழ் வரப் பெற்று படித்து இன்புற்று வருகிறேன். மறுபடியும் திருமலையில் உள்ள ஆன்மீக அன்பரும் எங்களுக்காக சந்தா செலுத்தி “ஸப்தகிரி” கிடைக்கும் படி செய்துள்ளார். இப்பொழுது எங்கள் விலாசத் திற்கு மாதம் இரண்டு இதழ்கள் வருகின்றன. ஒன்றை நான் வைத்துக் கொண்டு என் உறவினருக்கு ஒன்றை கொடுத்து படித்து மகிழ்ந்து வருகின்றோம்.

ஒவ்வொரு மாதமும் திருமலையப்பனின் சிறப்பு வைபவங்களோடு, ஸ்ரீபத்மாவதித் தாயாரின் வரலாறு மற்றும் சிறப்புக்களையும் படித்து பக்திப் பரவசமடைகின்றோம். மேலும், நம் நாட்டில் பிற பகுதிகளில் உள்ள கோயில்கள், அவற்றின் தோற்றம் பற்றிய வரலாறுகளையும் படித்து அறியமுடிகிறது.

ஸப்தகிரியில் அனைத்து தலைப்புகளில் வெளி வரும் கட்டுரைகளும் மிகச்சிறப்பாக உள்ளன. மேலும், திருமலையில் நடைபெறும் பிரம்ம உற்சவம், ஜ்யேஷ்டாபிஷேகம், வசந்தோற்சவம், திருக்கல்யாண வைபவத் திருக்காட்சி பற்றிய புகைப்படங்கள். நாங்கள் திருமலையானின் திருவிழாக்களை நேரில் கண்டு களித்த மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகின்றன.

நம்நாட்டின் பிற பகுதிகளில் உள்ள கோயில்கள் பற்றிய வரலாறுகளும், திருவிழாக்கள் பற்றிய செய்திகளும், அவற்றின் இருப்பிடங்களும் அறிந்து சென்று வணங்கி வர “ஸப்தகிரி” வழிகாட்டுகிறது. நம் ஆன்மீக அன்பர் தன் பக்தியில் திளைத்து வாழ்க்கைப் பாதையில், நல்வழியில் செல்ல நம் ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறுகள் துணை புரிகின்றன. பல மகான்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்களின் சுயநலமில்லாத பக்தித் தொண்டையும், சமூக அக்கறையுள்ள பெரு வாழ்வையும் விஸ்தாரமாக வெளியிட்டு வரும் “ஸப்தகிரி” பக்தி இதழ் ஆன்மீக அன்பர்களுக்கு ஒரு வரப் பிரசாதம் ஆகும். “ஸப்தகிரி”யில் கட்டுரைகள் எழுதி பக்திமார்க்கம் தழைத்தோங்கச் செய்யும் ஆன்மீக அன்பர்களுக்கும், கட்டுரை ஆசிரியர்களுக் கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள். நாம் அனைவரும் இவ்வுலகில் அமைதியுடனும், ஆன்மீகப் பற்றுட னும், அவரவர் கடமைகளைச் சிறப்புடன் செய்து திருமலைவாசனின் அருள்பெற்று இன்புற்று வாழ்வோமாக.

மேலும் நன்பர்கள், உறவினர்களுக்கும் “ஸப்தகிரி” சமய ஆன்மீக இதழை அறிமுகப்படுத்தி திருமலை வாசனின் அருள் பெற்று அவன் பாதம் பணிந்து சிறப்போமாக. வாழ்க்கை வளம்பெற, நலம் பெற, அமைதியுடன் வாழ “ஸப்தகிரி” படித்து பயன் பெறுவோமாக.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருமலையானின் அக்ஷர தீபிகை



ஸப்தகிரி

மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்ற டைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- “ஸப்தகிரி” படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ‘ஸப்தகிரி’ வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்துக் கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமியின் திருவருளைப் பெற வையுங்கள்.

# திருவேங்கடமுடையானும் எம்பெருமானாரும்

ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானார் எழுந்தருளி இருந்த நல்லடிக்காலத்திலே, சில ஸ்ரீகாளஹஸ்திச் சைவர்கள் திருவேங்கிட நாட்டை அக்காலத்தில் ஆட்சியிலிருந்த யாதவ மன்னனிடம் வந்து திருமலை சைவ க்ஷேத்ரம் என்றும், வேங்கடமுடையான் விஷ்ணு வல்லன் என்றும் சில குயுக்திகளைச் சொல்லி வாதித்துத் திருமலையைத் தங்கள் ஸ்வாதீனமாக்கித் தரவேண்டுமென்று நிர்பந்தித்தனர். அப்போது திருமலையில் எழுந்தருளியிருந்த சில ஸாது ஸ்ரீவைஷ்ணவர்கள் சைவர்களை வெல்லுவதற்காக ஸ்ரீரங்கத்திலிருந்து எம்பெருமானாரை எழுந்தருளச் செய்தனர்.

பின்பு அவர் எழுந்தருளி யாதவ ராஜனது ஸபையில் சைவர்களை வாதம் செய்து வென்று திருமலையைத் திருமாலின் தலமாகவும், திருமலையப்பனைத் திருமால் ஆகவும் ஸ்தாபித்தனர் என்று குருபரம்பரா ப்ரபாவம் முதலிய நூல்களால் தெரிந்து கொள்ளல் ஆகிறது. இவ்விஷயங்களை விளக்கமாகத் தெரிந்து கொள்வதற்கு அனந்தாழ்வான் அருளிய "ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸ மாலை" என்னும் வடமொழிநூல் மிகவும் உதவி செய்கிறது.

அதை மூலமாகக் கொண்டு "திருவேங்கடமுடையானும் எம்பெருமானாரும்" என்ற தலைப்பில் பல நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதலாம். இப்போது எம்பெருமானார் விஷ்ணு க்ஷேத்ரமென்று திருமலையை ஸ்தாபிப்பதற்காகக் கையாண்ட இதிஹாஸ புராண பாஞ்சராத்ர சிஷ்டாசார ச்ருதிஸ்ம்ருதி ரூபங்களான எண்ணற்ற ப்ரமாணங்களில் ஒரே ஒரு ருக்வேத (ச்ருதி) வாக்யத்தை ப்ரமாணமாக எடுத்து உபந்யஸித்து ஸ்தாபித்ததை மட்டும் அவ்விதிஹாஸ மாலையில் உள்ளபடியே விண்ணப்பிக்கிறேன்.

வேதமென்பது எம்பெருமானைப் போலவே ஆதியும் அந்தமுமற்றது. புருஷனால் செய்யப்படும் நூல்கள், அப்புருஷனுக்கு ஐயம் திரியுணர்ச்சி முதலிய குற்றங்கள் உள்ளமை ஸஹஜமானது ஆகையால் பிரமாணங்களாக (நம்பத்தக்க அத்தாட்சியாக) ஆகாமற் குற்றங்களுக்கு ஸம்பாவனையுள்ள ஒரு நூலாய் நித்யமாய் உள்ள வேதம் ப்ரமாணங்களில் மிகச்சிறந்தது என்பர் பெரியோர். அவ்வேதந் தன்னிலும் எப்படிப் பொருள்



கொள்வது என்று ஸந்தேஹம் ஏற்பட்டால், ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களைக் கொண்டு வேதத்தின் பொருளை ஐயமற அறுதியிட வேணுமென்றும் கூறுவர்.

வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ரீவசன பூஷண திவ்ய சாஸ்த்ரத்தின்கண் முதன் முதலில் பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்திருப்பது காணலாம். ஆகவே ஒரு ச்ருதி வாக்யமும் அதற்கு விவரணமான ஒரு புராண சுலோகமும் கொண்டு திருமலை விஷ்ணு க்ஷேத்திரமென்று உடையவர் நிச்சயம் செய்தருளியதை இனிக் காணலாம்.

ருக்வேதம் எட்டாம் அஷ்டகம், எட்டாம் அத்தியாயம் பதின்மூன்றாவது சர்க்கத்தில் **''அராயி காணே விகடே கிரிம் கச்ச ஸதாந்வே! சிரிம்பிடஸ்ய ஸத்த்வபி: தேபிஷ்ட்வா சாதயாமணி!!''** என்பது முதல் மந்திரமாகும். இது திருவேங்கடமலையின் விஷ்ணு க்ஷேத்ரத்வத்தை நிலைநாட்டவல்ல ப்ரபல ப்ரமாணம் ஆகும். இதில் ஸந்தேகம் ஏற்பட்டால், பவிஷ்யோத்தர புராணம் வேங்கடாசல மாகாத்மியம் பகுதி நான்காவது அத்தியாயத்திலுள்ள **''அராயி காணே விகடே கிரிம் கச்சே தம்விது! ஏவம் வேதமயஸ் ஸாகைஷத் கிரீத்த்ர பத்நகாசல!!''** என்கிற உபப்ரும்ஹண (விவரண) சுலோகத்தைக் கொண்டு அதைத் தீர்த்துக் கொள்ளலாமென்கிறார் எம்பெருமானார்.

முதலில் புராண சுலோகத்தின் பொருளைக் காண்போம். இப்புராணத்திலுள்ள வேங்கடாசல மாகாத்மியப் பகுதி திருமலை விஷ்ணுக்ஷேத்திரம் என்பதை மிகமிக ஸ்பஷ்டமாகக் கூறுகிறதென்பது முக்கியமாக இங்குக் கவனிக்கத்தக்கது. அதிலுள்ள இச்சுலோகம் ருக்வேதத்திலுள்ளதாகமுற்காட்டிய மந்திரத்தை **''அராயி காணே விகடே கிரிம் கச்ச''** என்று தொடங்கும் மந்திரத்தால் திருவேங்கட மலையைப் பெரியோர்கள் கருதுகிறார்கள் (இம்மந்திரம் திருவேங்கட மலையைக் குறிக்கிறதென்று பெரியோர்கள் கருதுகின்றனர் என்றபடி). "ஆதிசேஷ பர்வதமாகிய இவ்வுத்தமமான மலை வேதத்தினால் அறியப்படுவதனால் வேதமயமாகிறது" என்பது இச்சுலோகத்தின் பொருள்.

வேதமயம் – அறியப்படுவது, சாந்தோக்ய உபநிஷத்தில் **''மநோமய:''** (3–14) என்பதற்கு மனத்தினால் அறியப்படுவது என்றும், திருவாய் மொழியில் **''வேதமயன்''** என்பதற்கு வேதத்தினால் ஓதப்ப(ட்டு அறியப்)டுமவன் என்றும் உரையாசிரியப் பெருமக்கள் விளக்கியருளியுள்ளமை காண்க.

ஆக, முற்காட்டிய ருக்வேத மந்திரம் எதைக் குறிப்பிடுகின்றதென்று ஐயம் தோன்றினால் – **''இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும் ஹயேத்''** (பாரதம் 1–273) இதிஹாஸம் அல்லது புராணம் இவற்றைக் கொண்டு வேதத்தை விவரிக்க வேண்டும் என்றபடியே முற்கூறிய புராண சுலோகத்தைக் கொண்டு அந்த மந்த்ரம் திருவேங்கட மலையைக் குறிப்பிடுகின்றதென்பது நிச்சயிக்கப் படுகிறது. இனிமேல் மந்திரத்தின் கருத்தை எம்பெருமானார் இனிதே விளக்கியிருப்பதைப் பார்ப்போம். வேத புருஷன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களைப் பெற ஜீவாத்மாவை அழைத்து அவற்றை அடையத்தக்க





**தி.தி.தேவஸ்தானம் பசுக்களை பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை"யை நிறுவி அதற்கு பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான நல்வாய்ப்பினையும் ஏற்படுத்தி உள்ளது.**

**நன்கொடை ரூ.1,000/–க்கு குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே., திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. அஞ்சல், திருப்பதி–517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா அறக் கட்டளைக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு, வருமான வரி விலக்கும் உண்டு.**

## பக்தர்களின் கவனத்திற்கு...

- "நீரின்றி அமையாது உலகு" என்பார் வள்ளுவப் பெருந்தகை. எனவே திருமலையில் தண்ணீரை வீணாக் காதீர்கள். தண்ணீர் குழாய்களை உபயோகித்த பின்னர் நிறுத்தி விட்டுச் செல்லுங்கள்.
- மின்சாரத்தை சிக்கனமாகப் பயன் படுத்தவும். தேவையில்லாத நேரங்க ளில் மின்சாரத்தை நிறுத்தி வையுங்கள்.
- திருமலையில் பிளாஷ்டிக் பொருட் களைத் தவிர்த்து இயற்கை வளத்தைக் காத்திடுங்கள்

உபாயத்தை (வழியை) அவர்கட்டு உபதேசிக்கிறான். இம்மந்திரத்தில் இடத்தை ஒட்டி "த்வயி" என்று சேர்த்துக் கொள்க.

1. (குழந்தாய் ஜீவனே) *''தீவமி அராயி ஸதி - தி''* இவ்வுலகச் செல்வமும், ஸ்வர்காதிகளான மேல் உலகங்களிலுள்ள செல்வமும் இல்லாதவனாய் இருந்தால், *''த்வயி காணேஸதி - தீ''* வெளிக் கண்ணோ, உட்கண்ணான அறிவோ அற்றவன் ஆயிருந்தால் *''த்வயி விகடே ஸதி-தீ''* ஆத்யாத்மியம் (உடலின் கண் உண்டாகும் ஜ்வரம் முதலியது), ஆதி பௌதிகம் (மனிதன் விலங்கு முதலியவற்றால் உண்டாகும் துன்பம்), ஆதி தைவிகம் (இடி, மின்னல், வெப்பம் தொடக்கமாகத் தேவர்களால் உண்டாகும் துன்பம்) என்கிற தாபங்களை அடைந்தவனாயிருந்தால், *''த்வயி ஸதான்வே ஸதி-நீ''* முற்கூறிய புருஷார்த்தங்களைப் பெற வொட்டாமல் தடுக்கும் அசுரர் போன்ற பகைவரைப் பெற்றவனாயிருந்தால், *''சிரிம் பீடஸ்ய''* – (ச்ரீம் பீடஸ்ய) திருமகளுக்குத் திருமார்பினால் பீடமாகிய ஸ்ரீநிவாசனுடைய, கிரிம் – மலையைக் குறித்து *''சிரிம் பிடஸ்ய ஸத்த்வபி:''* – ஸ்ரீநிவாஸன் உடைய பக்தர்களோடு, *''கச்ச''* – (முற்கூறிய ஆபத்துக்கள் அனைத்தையும் போக்கிக் கொள்வதற்காக) சென்று சேர், (சேர்ந்து), *''தேபி:''* அவர்கள் மூலமாக, *''த்வா''* – நீ, *''சிரிம்பிடம் சாதயாமஸி''* – ஸ்ரீநிவாசனை வேண்டிக் கொள்ளத் தகுதி பெற்றிருக்கிறாய். ஆக, முன் சொன்ன செல்வமில்லாமை முதலிய துன்பங்கள் சேர்ந்த போது, ஸ்ரீநிவாசனுடைய திருமலையைக் குறித்து அவனுடைய பக்தர்களுடன் சென்று அவர்களை முன்னிட்டு அவனிடம் உனக்கு வேண்டிய பலனை யாசிக்க உரியவனாயிருக்கிறாய் என்று வேத புருஷனது உபதேசம் காண்க அல்லது *''தாதூநாம் அநேகார்த்தத்வம்''* என்கிறபடி வினையடிக்கு பல பொருள்கள் உள்ளமையால் (சாதயாமஸி) என்பதற்கு சமர்ப்பிக்க தகுதி பெற்றிருக்கிறாய் என்று பொருள் கூறுதலும் ஏற்கும்.

*''ச்ரீம் பிடஸ்ய த்வதேபி: சாதயாமஸி''* என்று அந்வைத்து ஸ்ரீநிவாசனுக்கு உன்னை அப்பக்தர்கள் வாயிலாகச் சமர்ப்பிக்கத் தகுதி பெற்றிருக்கிறாய் என்று பதபொருள் காணத்தக்கது. ஆக, முன்சொன்ன துன்பங்கள் சேர்ந்தபோது ஸ்ரீநிவாஸனுடைய திருமலை குறித்து அவனுடைய பக்தர்களோடு சென்று அவர்களை முன்னிட்டு உன்னை அப்பெருமானுக்குச் சமர்ப்பிக்கக் கடவாய் என்று வேத புருஷன் உபதேசிக்கிறானென்று கொள்க (ஸ்ரீநிவாசனை வேண்டிக் கொண்டால் அல்லது அந்த ஸ்ரீநிவாசனுக்கு உன்னை அர்ப்பணம் செய்தால், துன்பங்கள் நீங்கி அறம் முதலிய நான்கு புருஷார்த்தங்களும் கிட்டுமென்பது உட்கருத்து).

### மந்திரத்திலுள்ள சொற்களைப் பற்றிய சில விளக்கங்கள்

அரயி–ரை என்றால் செல்வம். விகடே– கடம் – தாஹம், தாப மென்றபடி. ஸதாந்வே – வேதத்தில் தாரவம் என்பது தார்வம் என்று மாறியது போல, தாநவ: என்பது தாந்வ: என்று மாறியுள்ளது. சிரிம் பிடஸ்ய–த்ர்யம்பக என்பது த்ரியம்பக: என்றும், ஸுவ: என்பது ஸ்வ: என்றும் திரிந்தது போல, மஹா லக்ஷ்மியின் பீஜாக்ஷரமான ச்ரீம் என்பது சிரிம் என்று திரிந்தது. பீட என்பது பீட: என்று மாறிற்று. அல்லது விசேஷமாக (நிலையாக) இருக்கும் இடம் என்ற பொருளைத் தருகின்ற விட: என்பது பிட: என்று மாறியதாகவும் கொள்ளலாம்.

விப்ராஜமாந: என்பது, பிப்ராஜமாத: என்றாயிற்றென்று கொள்வது போல இதைக் கொள்க. ஸத்த்வ: – எம்பெருமானை அர்ச்சித்து ஸத்தை பெற்றவன் என்பது பொருளாதலால் பக்தன் என்பது அப்பதத்தின் தேர்ந்த கருத்தாகும். முற்கூறிய முதற் பொருளில்–*சிரிம்பிடஸ்ய* (ஸ்ரீநிவாஸனுடைய) என்னும் ஆறாம் வேற்றுமைச் சொல், *ஸத்த்வபி:* (பக்தர்களுடன்), *கிரிம்*

(மலையைக் குறித்து) என்னும் இரண்டு சொற்களோடு சேரும்போது உள்ளபடியே சேருகிறது. **சாதயாமஸி** (யாசிக்கக் கடவாய்) என்றதனோடு சேரும்போது மட்டும் பொருளுக்குத் தக்கபடி **சிரிம்பிடம்** (ஸ்ரீநிவாஸனை) என்று இரண்டாம் வேற்றுமைப் பொருள்பட்டு நிற்கிறது.

இரண்டாம் பொருளிலோவென்றால் **சாதயாமஸி** (ஸமர்ப்பிக்கத் தகுதி பெற்றிருக்கிறாய்) – என்பதனோடு **சிரிம்பிடஸ்ய** என்றதனோடு சேரும்போது ஸ்ரீநிவாசனுக்கு என்னும் பொருளும் பெற்று ஆறாம் வேற்றுமை சொல்லாக இருந்து சேருகிறது. **ஸத்த்வை:** என்பது ஸத்த்வபி: என்றும், **தை: தேபிகா** என்றும் திரிந்து உள்ளது. முதற் பொருளில் இரண்டாம் வேற்றுமைச் சொல்லாகிய த்வா என்பது நீ என்று முதல் வேற்றுமை பொருள் உடையதாய் மாறுகிறது. இதற்கு ஸஹ ஸ்ரஸீர்ஷம் தேவம் என்ற இரண்டாம் வேற்றுமைச் சொற்கள் இரண்டும் முதல் வேற்றுமை பொருள் பட மாறியிருப்பதை உதாரணமாகக் கொள்க.

இரண்டாம் பொருளில் உன்னை என்று கூறவேண்டி இருப்பதனால் த்வா என்பது உள்ளப் படியே இரண்டாம் வேற்றுமைச் சொல்லாகவே இருந்து சேருகிறது. இவையெல்லாம் சாத்தவமான (வேதத்திலுள்ள) விகாரங்கள் (மயக்கங்கள்) செய்யுள்களில் விகாரங்கள் இருப்பது இயற்கை தானே. இம்மந்திரத்திலுள்ள சொற்களின் அமைப்பை நோக்கினால், ஸ்ரீநிவாஸன் உடைய மலையையும், ஸ்ரீநிவாஸனையும் அவனுடைய பக்தர்கள் முன்னிட்டு அடைய வேண்டி இருக்கும் நிலை இதில் இருந்து ஏற்படுகின்றபடியினால் இத்திருவேங்கடமலை விஷ்ணு ஸ்தலம் என்பதும், எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீபீடாகிய (அலர்மேல் மங்கையுறை மார்பனாகிய) விஷ்ணு பகவானென்பதும் உறுதிப்படுகிறது.

இங்ஙனம் எம்பெருமானார் ப்ரமாணங்களில் ச்ரேஷ்டமான வேத மந்திரத்தையும், அதற்கு விவரண ரூபம் ஆன புராண சுலோகத்தையும் உதாஹரித்து சைவர்களை வென்று யாதவ மன்னனை நம்பச் செய்து சிஷ்யனாக்கித் திருமலையையும், திருவேங்கடவனையும் காப்பாற்றிய படியினால் தான் இத்திவ்ய தேசம் உலகுக்குத் திலகமாய் விளங்குகின்றது.

**– கீர்த்திமூர்த்தி ஸ்ரீ.உவே. தி.அ.கிருஷ்ணமாசாரியர், திருப்பதி.**

## தி.தி.தே. கோ சம்ரக்ஷண சாலையில் கோபூஜை

108 திவ்விய தேசங்களில் ஒன்றான திருமலையில் புற்றில் தவமிருந்த ஸ்ரீநிவாசனின் பசியைப் போக்குவதற்காக “பிரம்மா பசுவாகவும், மகாலக்ஷ்மி கோபிகையாகவும், சிவன் கன்றாகவும் மாறினர். வேங்கடாசலத்தில் புற்றில் வீற்றிருந்த “ஸ்ரீநிவாசனுக்கு பசுவானது தன் மடியிலிருந்து அமிர்தமான பாலை தானாகவே சுரந்து எம்பெருமானுக்கு வழங்கியது. “பசுவின் பாதுகாப்பே நாட்டின் பாதுகாப்பு” என்று பவிஸ்யத் புராணமும் கூறுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு தி.தி.தே. கோசாலைகள் பல அமைத்து, பசுக்களை பராமரித்து வருகிறது.

திருப்பதியில் அமைந்துள்ள தி.தி.தே. “ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷண சாலை”யில் கோகுலாஷ்டமியை முன்னிட்டு 04-09-2026 அன்று கோபூஜை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள், இணைச் செயலாட்சித் தலைவர் (கல்வி மற்றும் சுகாதாரம்) திரு.பி.கோபிநாத் ஐ.ஏ.எஸ்., அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு.ஜி.பானு பிரகாஷ் ரெட்டி அவர்கள், திருப்பதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆரணி ஸ்ரீநிவாசுலு அவர்கள், கோசாலை இயக்குனர் திரு.சிவகுமார் அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்.





# நவராத்திரி நாயகியர்



- திரு. கே.ராமநாதன்,
சேலம், 94433 72202

இறைவன் மீது முழு அன்பையும், பக்தியையும் செலுத்திச் செய்யும் ஆன்மீகப் பயணத்தின் வழியே இறைவனை அடையலாம் என்பதே இந்து மதம் உலகுக்கு உணர்த்தும் உண்மையாகும். இதையே கண்ணன் பகவத்கீதையில் "உன் மனதை என்மீது மட்டும் நிலைநிறுத்தி உன் அறிவை என்னிடம் ஒப்படைக்கும்போது நீ என்னில் வாழும் வாழ்வு பெறுகிறாய்" (கீதை 12.8) என்கிறார்.

உலகின் ஆற்றலே சக்தியின் வடிவம் என்று இந்துமதம் போற்றுகிறது. சக்தி என்பது பிரபஞ்சத்தின் முழுமையான ஆற்றலாகும். இந்த ஆற்றலே படைப்பு, பராமரிப்பு, அழிவு ஆகிய அனைத்திற்கும் காரணமாகும். இத்தகைய ஆற்றலை வணங்குவதன் வழியே மனிதர்கள் பிரபஞ்சத்தின் இயல்பை புரிந்துகொண்டு அதனுடன் இணக்கமாக வாழமுடியும். சக்தி வழிபாடு ஆணவத்தை அழித்து, பக்தியின் மூலமாகத் தூய்மைபெற்று இறையருள் பெற வழிவகுக்கிறது. அவ்வகையில் அன்னை ஆதிபராசக்தி அனைத்திலும் நிறைந்து விளங்குவதை உலகிற்கு உணர்த்தும் வழிபாட்டின் சிறப்பே நவராத்திரி நாயகியரைப் போற்றிடும் நவராத்திரி விழாவாகும்.

ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி விழா பாரத நாடெங்கும் வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. நவராத்திரி விழா ஒன்பது இரவு, பத்து பகல் என விஜயதசமியுடன் சேர்த்து பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. இவ்விழா மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரைப் போற்றி வழிபடும் விழாவாகும். இந்த ஒன்பது நாட்களும் தீய சக்திக்கு எதிராய் நன்மையின் வெற்றியைப் பறைசாற்றிடும் காலம் என்றும், மனித மனத்தில் உள்ள தீய எண்ணங்களை அகற்றி நல்ல எண்ணங்களை வளர்த்திடும் தவக்காலம் என்றும் கூறலாம்.

தமிழகத்தில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் சக்தி வழிபாடு அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. பின்னர் திருமலை நாயக்கர் காலத்தில் இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கு இவ்விழா கொண்டாடும் உரிமை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இவ்விழா மக்கள் அனைவரும் கொண்டாடும் விழாவாக வளர்ந்தது.

ஒன்பது நாட்கள் நடைபெறும் இவ்விழா துர்கை (சக்தி), இலக்குமி (செல்வம்), சரஸ்வதி (அறிவு) என்னும் மூன்று தேவியருக்கும் முறையே மூன்று மூன்று நாட்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்வழிபாட்டு அமைப்பு அன்னையின் அருள் பெற நடத்தப்பெறும் ஆன்மீகப் பயணமாகும். ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் ஒருவன் தடைகள் தகர்த்து எதிர்மறை குணங்களை நீக்கும்

இச்சா சக்தியைப் பெற வேண்டும். பின்னர் தன் தொடர் பயணத்தில் நீதிமுறைப்படியான செயல் செய்வதற்கு அவனுக்குச் செல்வ ஆற்றலான கிரியாசக்தி தேவை. இறுதியாக உண்மையை உணர்வதற்கு வழிகாட்டிடும் அறிவாற்றலான ஞானசக்தி தேவை. அவ்வகையில் இவ்விழா அம்மூன்றையும் வழிபட்டுப் பெறுவதற்கு வழிவகுக்கிறது. எனவே நவராத்திரி விழா அகம் மற்றும் புறத் தீமைகளை வென்று ஆன்மீக வாழ்வா தாரத்தை அடைந்து உண்மை உணர்தலைப் பெறுவதாகும்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்கள் இச்சாசக்தியான துர்கையைப் போற்றி வழிபாடு செய்யப்படுகிறது. துர்கை அசுர சக்தி மற்றும் தீமையை எதிர்த்துப் போரிடும் தேவி பார்வதியின் வடிவமாகும். சங்க இலக்கியத்திலும் பாலை நிலக்கடவுளான கொற்றவை வழிபாடு குறித்து பேசப்பட்டுள்ளது. போருக்குச் செல்லும் வீரர்கள் வெற்றி கைக்கூட கொற்றவையின் பெருமைகளைக் கூறி வழிபட்டுச் செல்வது வழக்கம். சங்க நூல்களில் **''ஓங்குபுகழ் கானடர் செல்வி''** என்றும், **''நெற்றி விழியா நிறைத் திலகம் இட்டாளே கொற்றவைக் கோலம் கொண்டு ஒரு பெண்''** என்றும் குறிப்பிடுவதைக் காணலாம்.

தேவர்களின் உரிமையைப் பறித்த மகிஷாசுரன் போன்ற அசுரர்களை அழிக்கும் அன்னையின் செயல்பாடு அண்டத்தின் இறுதியில் அவளே முழு பாதுகாவல் தெய்வம் என்பதைச் சொல்கிறது. எனவே துர்கை என்பது ஒரு வரலாற்று நிகழ்வல்ல. அது தர்மம் மற்றும் அதர்மத்திற்கிடையேயான நித்திய போராட்டத்தின் அடையாளம் எனலாம்.

நவராத்திரியின் நடுமூன்று நாட்கள் அலைமகளான இலக்குமி தேவியைப் போற்றி வழிபடும் விழாவாகக் கொண் டாடப்படுகிறது. கிரியா சக்தியின் வடிவமாகத் திகழ்ந்திடும் அன்னை இலக்குமி நம் வாழ்வில் நீதிமுறைப்படியான செயல் செய்வதற்கு செல்வ ஆற்றலை முழுமையாக வழங்கிடும் தெய்வம் ஆவாள். அபிராமி அந்தாதி அம்பிகையை இலக்குமி யின் வடிவமாகவே காணுகிறது. அவர் **''உதிக்கின்ற செங்கதிர்''** என்ற முதல் பாடலிலே இலக்குமியின் குணங்களை அன்னை அபிராமியின் வடிவில் போற்றுவதைக் காண்கிறோம். மேலும், அவர் அம்பிகையை வணங்குவோர் உலகம், குதிரை, யானை, மணி மகுடம், பல்லக்கு, பொன், அணிகலன் என அனைத்து செல்வங்களும் பெறுவர் என்று அவர் குறிப்பிடுவதன் மூலம் அம்பிகையே இலக்குமியின் வடிவம் என்பதைத் தெளிவாக அறியமுடிகிறது. எனவே இலக்குமியை வணங்கிடும் இவ் வழிபாட்டு விழா நமக்கு நிலைத்த வளமான வாழ்க்கை தேவை என்பதையும், அவளை வணங்கிட அவற்றை அவள் தந்து அருள்வாள் என்பதையும் வெளிப்படுத்தி நிற்பதைக் காணலாம்.

நவராத்திரியின் இறுதி 3 நாட்கள் அறிவின் தெய்வமாகப் போற்றப்படும் சரஸ்வதியின் வழிபாட்டை கூறுகிறது. ஆன்மீகப் பயணத்தில் உண்மையை உணர்வதற்கு வழிகாட்டிடும் அறிவாற்ற லான ஞான சக்தி தேவை. அவ்வகையில் இவ்விழா சரஸ்வதியைப் போற்றி வணங்கிடும் வகையில் கொண்டாடப் படுகிறது. சரஸ்வதி தேவி தன் கணவ ரான நான்முகனிடம் நிறைந்த அருள் வேண்டுகிறாள். நான்முகன் அவள் வேண்டுதலை ஏற்கிறார். அதைத் தொடர்ந்து தேவி சரஸ்வதி நான்முகனின் நாக்கில் அமர்கிறாள். அவ்வகையில் தேவியை வணங்குவோர் தெளிந்த நல்லறிவைப் பெறுவர் என்பது நம்பிக்கை. தேவியைப் போற்றிடும் வகையில் பாரதியாரும் **''வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்''** என்ற பாடலில் அவளது இருப்பிடத்தின் சிறப்பையும், அவளது பெருமையையும் சிறப்புறப் பாடியிருப்பதைக் காணலாம். எனவே தான் விழாவின் ஒன்பதாம் நாளன்று வீட்டில் அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களுடன் கல்வியறிவு பெறும் குழந்தைகளின் நூல்களையும் வைத்து வழிபடுவது வழக்கம்.

நவராத்திரி விழா முப்பெரும் தேவி யருடன் தொடர்பு உடைய வழிபாட்டு விழா ஆகும். இவ்வழிபாட்டின் வழியே சக்தியின் பன்முகத் தன்மையை அறிவ தோடு மனித வாழ்வின் பல்வேறு நிலைக ளுக்கான தெய்வீக அருளையும் வெளிப் படுத்துவதை உணரலாம்.

இவ்விழா வெறும் ஆன்மீகச் சடங்கு மட்டுமல்ல. மாறாக தெய்வீகப் பெண்மை யின் மகத்துவத்தையும், அது மனித குலத்திற்கு அவள் வழங்கிடும் பேரரு ளையும், வாழ்வின் அனைத்து நிலைகளி லும் அவள் நீக்கமற நின்றிடும் உண்மை யையும் உணர்த்தி நிற்கிறது.



# கெட்டவர் நால்வர் யார் தெரியுமா?

ஒரு குருகுலத்தில் கற்று தேர்ந்த இளைஞன் விடை பெற்று திரும்பும்போது குருவிடம் "எனக்கு கல்வியுடன் பல வித்தைகளையும் புத்திமதிகளையும் சொல்லி என்னை மனிதனாக்கினீர்கள். ஆனால், இவ்வுலகில் முழு மனிதனாக நான் வாழ என் மனதில் பதியுமாறு தகுந்த அறிவுரையைத் தயை கூர்ந்து சொல்லுங்கள்" என வணங்கி கேட்டான்.

"நீ விட்டுக் கெட்டவனையும், விடாது கெட்டவனையும், தொட்டுக் கெட்டவனையும், தொடாது கெட்டவனையும் மறக்காமல் நடந்து கொள். நல்லவனாக வாழ்வாய்" என்றார் குரு.

குரு சொன்னதைக் கேட்டு அந்த இளைஞன் குழம்பி, "குருவே சற்று விளக்கமாகக் கூறுங்கள். அதன்படி நடந்து கொள்கிறேன்" என்றான்.குரு விளக்கினார். "திருமால் வாமன வடிவெடுத்து மூன்று அடி நிலம் கேட்டபோது எதை வேண்டுமானாலும் தருகிறேன் என்று கூறி, ஒரு அடிக்கு பூமியையும் மறு அடிக்கு விண்ணுலகத்தையும், மூன்றாவது அடிக்கு தன்னையே கொடுத்தும் கெட்டுப் போனவன்தான் மகாபலி". இவனை நீ மறக்கக் கூடாது. "வாக்கு கொடுக்கும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். பிறர் என்ன கேட்பார்கள் என்பதை அறியாமலேயே வாக்கு தருவது தவறு. எனவே ஆராய்ந்து, அறிந்து வாக்கு கொடு".

அடுத்து, விடாது கெட்டவன் பற்றி சொல்கிறேன். "பாண்டவர்களின் தூதுவனாக கண்ணன் துரியோதனிடம் சென்று ஐந்து காணி நிலமாவது தருமாறு கேட்டான். துரியோதனன் ஒரு அடி மண்கூட தர மாட்டேன் எனச் சொல்லிவிட்டான். தனது சகோதரருக்கு ஒரு சிறு இடத்தைக்கூட விட்டுத் தராமல் போனதால் துரியோதனனும் அவனது சுற்றத்தாரும் மாண்டனர்". எனவே, "இந்த மண்ணில் வாழ்பவர்களுடன் விட்டுக் கொடுத்து, அனுசரித்து நடந்துகொள். அது உன் வாழ்க்கையை மேன்மேலும் வளமாக்கும்".

தொட்டுக் கெட்டவன் யார் தெரியுமா?"பத்மாசுரன் என்ற அரக்கன் சிவனை நோக்கி கடும் தவம் செய்து தன் கை யார் தலைமீது படுகிறதோ அவர்கள் உடனே பஸ்பம் ஆகிவிட வேண்டும் என்ற வரத்தைப் பெற்று இஷ்டப்பட்டவர்களை எல்லாம் கொன்றான். ஒருமுறை சிவபெருமானின் தலையிலேயே கை வைக்க முயன்றான். ஈஸ்வரன் தப்பி ஓடுவதுபோல் நடித்து எல்லா ஆயுதங்களையும் இழந்துவிட்டவர் போல் பாவனை காட்டினார். அவனது அட்டூழியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவெடுத்தார். விஷ்ணுவும் அவரும் இணைந்து ஒரு தந்திரம் செய்தனர். விஷ்ணு அழகிய மோகினி ரூபம் எடுத்து பத்மாசுரனிடம் சென்றார். அவரது அழகில் மயங்கிய அசுரனிடம் நீ என்னைபோல் நடனமாட வேண்டும். அவ்வாறு செய்தால்



## அன்ன வாகனத்தில் கலை மகளாய்...

பிரம்ம உத்ஸவத்தில் இரண்டாம் நாள்மாலை அன்ன வாகனத்தில் கையில் வீணை யோடு நா மகள் கோலத் தில் வெண் பட்டு உடுத்தி காட்சி தருகிறான் பகவான்.

**ஆண்டாளும் அன்னமும் :**

''அன்ன வயல் புதுவை ஆண்டாள்'' என்று ஆண்டாளின் வில்லிபுத்தூரைப் பாடுகிறார். ஆண்டாளைப் பார்க்க அன்ன உரு எடுத்து வந்தான் என்று ஒரு பொருள். இன்னொரு இடத்திலே "மென்னடை அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தார்'' என்று ஆண்டாள் நாச்சியார் பாடுகிறார். நடை அழகுக்கு அன்னப் பறவை. அந்த அன்னப்பறவைகள் ஆண்டாளின் நடை அழகைக் கண்டு நாணுவ தோடு அந்த நடை அழ கைத் தானும் கற்க வேண்டும் என்று வில்லிபுத்தூ ரிலேயே திரிகிறதாம். அன்னம் மட்டு மல்ல அன்னமாய் அருமறை பயந்த வனும் சாரமான பொருளான திருப்பாவையைக் கேட்க வில்லி புத்தூரிலே உறைகின்றானாம். விஷ்ணுவின் பல அவதாரங்களில் ஒன்று ஹம்ச அவதாரம். மறைந்த வேதங்களை மீட்டெடுத்து அளித்த அவதாரம் அன்ன அவதாரம்.

உன்னை மணந்துகொள்கிறேன் என்றார். பத்மாசுரனும் மோகினி போலவே நடனம் ஆடினான். ஒரு கட்டத்தில் மோகினி தன் தலைமீது கை வைக்கவே, மோகத்தில் பத்மாசுரனும் அவ்வாறே தன் தலைமீது கைவைத்தான். அந்த இடத்திலேயே பஸ்மமும் ஆனான்". இது போல "பெண்களின் மீது மோகம் கொண்டு உன் தலையில் நீயே மண்ணை போட்டு கெட்டுப் போகாதே".

தொடாமல் கெட்டவன் பற்றிக் கேள். "சீதையின் மீது ஆசை கொண்டு அவளை சிறை எடுத்துச் சென்றான் இராவணன். பிற பெண்களை அவர்கள் அனுமதியின்றி தொட்டால் இராவணனுக்கு அழிவு ஏற்பட்டுவிடும். இதன் காரணமாகவே அவள் மீது தன் கைவிரல் நகம் கூடப்படாமல் தொடாமலேயே அவளை தன் இச்சைக்கு வற்புறுத்தினான். இதனால் இராமனின் பாணத்திற்கு பலியானான் இராவணன்''. இவனைப் போல் "பிறன்மனை நோக்காமல் உன் மனைவியுடன் ஒருத்திக்கு ஒருவனாக வாழ்ந்திடு" என்றார் குரு.

இளைஞனின் மனம் தெளிவு பெற்றது. குரு சொன்னபடியே விட்டுக் கெட்டவனையும், விடாது கெட்டவனையும், தொட்டுக் கெட்டவனையும், தொடாது கெட்டவனையும் மனதில் நிறுத்தி நல்லவனாக வாழ முடிவு செய்தான்.

**- திரு.பொ.பாலாஜிகணேஷ், சிதம்பரம்,**
**9842550844**

## குறுக்கெழுத்துப் புதிர் விடை -123

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ர | சு | ரா | ம | ஜெ | ய | ந் | தி | | | |
| ரி | தி | 2 ஸ்ரீ | ந | ர | சி | ம் | ம | ஜெ | ய | ந் | 3 தி |
| ண | ந் | 4 ஹ | னு | ம | த் | ஜெ | ய | ந் | தி | | ரு |
| யோ | ய | ய | | ம் | தி | ந் | ய | ஜெ | க | ரா | 5 வ |
| த் | ஜெ | க் | ம் | வ | ஸ | த் | ரோ | த் | வி | 6 ப | த் |
| ஸ | ஷி | ரீ | ர | ஸ | | | 7 ச | | | ல | ய |
| வ | ரி | வ | பூ | த் | த | | க் | | | ரா | ய |
| ம் | க | ஜெ | ப் | போ | ந் | வி | க | ர | து | 8 ம | னோ |
| ஜ | ம | ய | டி | ப் | ச | | ர | | | ரா | த் |
| நு | கு | ந் | 16 ஆ | 9 தெ | 12 வ | 10 ம | த் | ஸ் | ய | 11 இ | ஸ |
| மா | ரு | தி | ம் | வ | ஸ | த் | மோ | ம் | ர | 13 பி | வ |
| 14 ரா | 15 பி | ர | தி | வா | தி | ப | ய | ங் | க | ர | ம் |



# அக்டோபர் 2026
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழில் விருத்தி உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தூரதேச யாத்திரையில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் நடக்கும். தம்பதியரிடையே ஒற்றுமை அதிகமாகும். தெய்வ பலத்தால் முன்னேறும் மாதம்.

### ரிஷபம்

கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். தொழில் போட்டியில் வெற்றி கிடைக்கும். படித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண் பெறுவர். முயற்சியில் வெற்றி பெறும் மாதம் இது.

### மிதுனம்

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தொழிலில் புதிய முயற்சிகளில் வெற்றியும், நல்ல லாபமும் கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். தம்பதியரிடையே நல்ல அன்னியோன்யம் உண்டு. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நினைத்ததைச் சாதிக்கும் இனிய மாதம்.

### கடகம்

தொழிலில் கஷ்டப்பட்டு முன்னேற்றம் பெறுவீர்கள். பெற்றோருக்கு நன்மை உண்டு. வேலை செய்யும் இடத்தில் பேசுவதில் பகை ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் சிறு பிரச்சனைகள் உண்டாகும். உங்கள் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். முன்னேற்றமும் சந்தோஷமும் நிறைந்த மாதம் இது.

### சிம்மம்

தொழிலில் செலவுகள் அதிகமாகும். வேலைப்பளு அதிகமாகும். உங்களுடைய மற்றும் வாழ்க்கைத் துணைவரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. கூட்டு வியாபாரத்தில் குழப்பம் உண்டாகும். மாணவர்கள் கடுமையாக படித்தல் வேண்டும். உத்தியோகஸ்தர்கள் இருக்கும் வேலையை விட்டு விடக்கூடாது. மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டிய மாதம் இது.

### கன்னி

தொழிலில் எதிர்பார்த்த தன லாபம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தம்பதியரிடையே இருந்த பிரச்சனைகள் தீரும். திருஷ்டி காரணமாக காரியங்கள் தாமதமாக நடக்கும். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். தொழிலில் பழைய பாக்கிகள் வசூல் ஆகும். சிறிது தாமதம் ஆனாலும் நினைத்ததைச் சாதிக்கும் இனிய மாதம் இது.

### துலாம்

தொழிலில் நல்ல மாற்றங்கள் நிகழும். வீண் செலவுகள் இம்மாதம் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். கல்விக்கான செலவுகள் அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். தம்பதியர் இடையே இருந்த பிரச்சனைகள் தீரும். குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும். நல்ல மாற்றத்தைத் தரும் மாதம்.

### விருச்சிகம்

தொழிலில் அலைச்சல், வளர்ச்சி இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நல்ல லாபமும், தாராளப் பணப்புழக்கமும் உண்டு. ஆரோக்கியக் குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் யோகமான மாதம் இது.

### தனுசு

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வயிறு உபாதை ஏற்படும். கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் தவிர்க்கவும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களுக்குக் கீழ்மட்ட ஊழியர்களால் பிரச்சனை உண்டாகும். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம் இது.

### மகரம்

தொழிலில் நினைத்ததை எல்லாம் சாதிப்பீர்கள். ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. தெய்வ அருள் நிறைந்த இனிய மாதம் இது.

### கும்பம்

தொழிலில் பணம் வசூலில் தாமதம் ஆகும். தன் கீழ் பணிபுரியும் பணியாளர்களால் நன்மை உண்டு. ஆரோக்கிய குறைபாடுகளுக்கு மருத்துவம் கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். கடன் வாங்குவதையும், கொடுப்பதையும் தவிர்ப்பீர். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மிகவும் கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம்.

### மீனம்

வேலைப்பளு காரணமாக உடல் வலி, தூக்கம் இன்மை உண்டாகும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். வெகு காலம் குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். தம்பதியர் இடையே சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரி ஆகும். கூட்டு வியாபாரத்தில் கணக்கு வழக்குகளை சரி பார்த்துக் கொள்ளவும். தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதம்.

# பல்சுவைப் பகுதி

## சிறுவர் உலகம்

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!






### விடைகள்

1) ஸ்ரீபார்வதி, 2) ஸ்ரீகாமாக்ஷி, 3)ஸ்ரீமீனாக்ஷி, 4)ஸ்ரீகாமாக்ஷி,
5) ஸ்ரீவிசாலாக்ஷி, 6) சாமுண்டேஸ்வரி, 7) கனக துர்கை, 8) மஹாகாளி.

## விஷ்ணுவின் அம்ச சித்திரப்படத்துடன் பெயர்களை பொருத்துக



விஷ்ணுவின் அம்சமே ஆழ்வார்கள். இங்கே விஷ்ணுவின் அம்சங்களின் சித்திரபடம் உள்ளன. அருகில் ஆழ்வார்களின் பெயர்களும் உள்ளன. இரண்டினையும் பொருத்துக.

அ) நம்மாழ்வார்
ஆ) ஆண்டாள்
இ) பொய்கையாழ்வார்
ஈ) பேயாழ்வார்
உ) மதுரகவி ஆழ்வார்
ஊ) தொண்டரடிப்பொடி ஆழ்வார்
எ) திருப்பாணாழ்வார்
ஏ) பூதத்தாழ்வார்
ஐ) திருமங்கையாழ்வார்
ஒ) பெரியாழ்வார்
ஓ) திருமழிசையாழ்வார்
ஔ) குலசேகராழ்வார்

### அம்சம் – ஆழ்வார்கள் விடைகள்

1) இ
2) ஏ
3) ஒ
4) ஈ
5) அ
6) ஒ
7) ஔ
8) உ
9) ஐ
10) ஊ
11) எ
12) ஆ




திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-51



## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. “கோளரி மாதவன் கோவிந்தன்” என்று ஆண்டாள் அருளிச் செய்த பிரபந்தம்.......................................
2. “மெய்ந்நெறி மாதவன்” எனக் கம்பரால் போற்றப்படுபவர் ........................................
3. நவராத்திரியில் இறுதி மூன்று நாட்கள் வழிபடப்படுபவர் ........................................
4. “பித்ரு மோக்ஷ அமாவாசை” என்று அழைக்கப்படும் நாள்........................................
5. ஆந்திராவில் “திருவெங்கலநாதர்” ஆலயம் அமைந்திருக்கும் ஊர் ........................................
6. தி.தி.தே. ஏழை எளியோருக்காக மருத்துவம் அளித்திடும் அறக்கட்டளை........................................
7. “கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி” என்று பாசுரமிட்டவர் ........................................
8. “வீட்டில் இருந்த பெருமாள் ஸ்வாமி” அருள்புரியும் தலம் ........................................
9. ஆந்திராவில் “ஹனுமத் க்ஷேத்திரம்” என்றழைக்கப்படும் தலம் ........................................
10. தி.தி.தே.வில் ஊனமுற்றோர்களுக்காகச் செயல்படும் மருத்துவமனை ........................................
11. மனிதன், விலங்கு முதலியவற்றால் உண்டாகும் துன்பம் ........................................
12. “ஹம்ஸ சந்தேசம்” எனும் காவியத்தை அருளிச் செய்தவர் ........................................
13. “வெற்பென்று இருஞ்சோலை வேங்கடம்” என்று அருளிச் செய்தவர்........................................
14. “திருமலைக்குச் சென்றாலே முக்தி கிட்டிடும்” எனக் கூறும் காவியம் ........................................
15. அண்ணன் ஸ்வாமிகளால் சுப்ரபாதம் அருளக் காரணமாக இருந்தவர் ........................................



## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.10.2026.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## சிறுவர் உலகம் பல்சுவைப் பகுதி

## எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



## தெரிந்து கொள்வோம்!



### ஆண்டாள் மாலை

ஆண்டாள் திருவேங்கடவனை பக்தியுடன் வணங்கி பாசுரங்கள் பல அருளியுள்ளது அனைவருக்கும் தெரிந்ததே. திருவேங்கடவனின் 5ஆம் நாள் கருட சேவை மிகவும் பிரபலமானது. அந்த கருட சேவைக்கு திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் சந்நதியிலிருந்து மேளத்தாளத்துடன் பக்தி சிரத்தையுடன், ஆண்டாள் மாலை கொண்டு வந்து திருமலையப்ப ஸ்வாமிக்குச் சமர்ப்பிக்கப் படுகிறது. "கோதை சூடி களைந்த மாலை"யை திருவேங்கடவன் விருப்பத்துடன் அணிந்து கருட வாகனத்தில் காட்சியளிப்பது காண்பதற்கு கண்களுக்கு மட்டுமின்றி மனத்திற்கும் இனிதாக அமைந்த ஒரு விஷயம். பக்தியுடன் நாம் செய்யும் செயலை இறைவன் என்றும் ஏற்றுகொள்வார் என்பதற்கு இது ஒரு சான்று.

சிறார்களே, இங்கு திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறும் உத்ஸவங்களில் சில கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வுத்ஸவங்களைக் குறித்து சில வரிகள்...





**புஷ்ப யாகம் :** பலவிதமான மலர்களைக் கொண்டு ஒரு யாகமாக அதாவது கூடை கூடையாக ஐந்து டன்களுக்கும் மேலான மலர்களால் திருமலையப்ப ஸ்வாமிக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். பிரம்மோத்ஸவத்திற்குப் பின்வரும் திருவோணத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறும்.



**பவித்ரோத்ஸவம் :** வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ மனிதர்கள் செய்யும் தவறுகளுக்குப் பரிகாரமாகச் செய்யப்படுவதே இந்த பவித்ரோத்ஸவச் சேவையாகும். திருமலையில் பவித்ரோத்ஸவச் சேவையானது மூன்று நாட்கள் நடைபெறும்.



**ஜேஷ்டாபிஷேகம் :** "அபித்யேயக அபிஷேகம்" என்ற ஜேஷ்டாபிஷேகம் திருமலையப்ப ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்களின் உற்சவத் திருமேனிகளை பாதுகாப்பாக மூடியிருக்கும் அபித்யேயக கவசங் களை மாற்றும் ஒரு விசேஷ நிகழ்ச்சியாகும்.

சித்திரக் கதை

# முதல் தரிசனம், பூஜை, நைவேத்தியம்

கதை : திரு.ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு.கே.துளசிபிரசாத்





வராக ஸ்வாமி ஸ்ரீஹரியைக் கூர்ந்து நோக்கி...
சரி! இந்தக் குளத்தின் கரையிலே உமக்கு 100 அடி நிலம் தருகின்றேன். ஆனால் அதற்கான கட்டணத்தை நீ செலுத்திட வேண்டும். அதற்கு உனக்கு சம்மதமா?
சரி ஸ்வாமி! அந்தக் கட்டணத்திற்குப் பதிலாக இந்த மலைக்கு வரும் பக்தர்கள் முதலில் உங்களைத்தான் தரிசிப்பர். முதலில் உங்களைத்தான் வழிபடுவர். முதல் நைவேத்தியமும் உமக்கே! இதற்கு உமக்கு சம்மதமா?
நான் இதற்கு சம்மதிக்கின்றேன்.
தாங்கள் நான் தங்கிட இடம் கொடுத்ததற்கு மிக்க மகிழ்ச்சி.
இருவரும் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்த அச்சமயத்தில் வகுளமாதா அவ்விடத்திற்கு வந்தார். அப்பொழுது ஸ்ரீவராகர் வகுள மாதாவிடம்...
வகுள மாதாவே! ஸ்ரீஹரியை அன்போடு கவனித்துக் கொள்ளுங்கள்.
வராகப் பெருமானும் முதல் நைவேத்தியம், முதல் தரிசனம், முதல் பூஜை என இன்றும் ஏற்றுக் கொள்கிறார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/–(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :

**0877-2233333**

**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams, Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.

















16–09–2026 அன்று மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திரபாபு நாயுடு அவர்கள் திருமலையில் நவீனமயமாக்கப்பட்ட ஸ்ரீவேங்கடேஸ்வரா அரும்பொருட்காட்சியகத்தைத் திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் ரிலையன்ஸ் நிறுவனம் நன்கொடையாக வழங்கிய மின்சாரப் பேருந்துகளை பக்தர்களின் சேவைக்காக கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATEDMONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-09-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026
"LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.







**20-10-2026**

**செவ்வாய்க்கிழமை**

**பகல் : சக்கரஸ்நானம்**